காலாண்டு இலக்கியச் சிற்றிதழ்

# முத்திதழ்

MUTHTHITHAL

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

இதழெண் 12

ISSN 2806-5123

ஜனவரி/மார்ச் 2024

விலை 200.00

SCAN ME

Printing & Published by MUTUR JMI PVT LTD SINCE 2016



# Muththithal Mutur

காலாண்டு சிற்றிதழ்

முத்திதழ்

MUTHTHITHAL இத்திதழ்

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

MUTUR JMI PVT LTD

jmi MUTUR

SINCE 2016

0717891887 | 0262238593

Muththithal Mutur

muturjm@gmail.com

Bazar Mosque Road Mutur

# Arham Catering

ARHAM CATERING

விசேட வைபவ ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
வெள்ளிக்கிழமைகளில் புரியாணி மற்றும் சகன் சாப்பாடும் பெற்றுக்கொள்ள முடியும்.

Basmathi Fried Rice | Fried Chicken
Fried Eggs | Beef Curry | Mix Fruit Jam
Salad | Maldive Fish Sambol

Delivery Order

075 359 0240
077 359 0271





## முத்திதழ் சஞ்சிகை

மூதூர் மண்ணை பிரதிநித்துவம் செய்யும் வகையில் 2020 ஜனவரி மாதம் முத்திதழ் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டு வருகின்றது. இலக்கியம் மற்றும் ஆவண சஞ்சிகையாக காலாண்டு தோறும் வெளிவரும் இச்சஞ்சிகை இதுவரை 11 இதழ்கள் வெளிவந்துள்ளன.இந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. மேலதிக தொடர்புகளிற்கு 0771020030






எமது சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் கீழுள்ள எண்ணை அழையுங்கள்
0771020030 | 0717891887

முத்திதழ்
MUTHTHITHAL
நீ. நான்.. நாம்...
முதுசத் தொகுப்பு

## இதழ்-12, ஜனவரி/மார்ச் 2024




இதழ் - 12
பக்கங்கள் - 52
வகை - இலக்கிய சிற்றிதழ்

வெளியீடு
**மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்**

முதன்மை ஆசிரியர்
**ஜுனைட் முஹம்மது இஹ்ஷான்**

வெளியீட்டாளர்
**நியாஸ் ஆஷா பாலின்**

0262238593/0771020030
094-717891887
Muththithal Mutur
muturjmi@gmail.com
www.mutur-jmi.com
Bazar Mosque Road

**விலை-200.00**

## உள்ளடக்கம்

காளான் உற்பத்தி... — 21
மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்

பிறந்ததும் குழந்தை... — 36
என். ஆஷா பாலின்

முஹம்மட ரஷீம்... — 28
நேர்காணல்

சினிமா இலக்கியம்... — 33

மகற்பேறின் பின்னர்... — 14
Dr ஜலீலா முஸம்மில்

கறுப்பு பச்சையம்... — 08
ஏ.எம்.றியாஸ் அகமட்

ஊடக மயக்கம்... — 25
ஏ.எல். அன்ஸார்

இளைஞர்கள்... — 46
ஆர்.எம்.ஹுஸைன்

## சந்தா விபரங்கள்

- வருட சந்தா - 1000.00
- மாதாந்த சந்தா - 250.00

தபால் செலவு இலவசம்

உங்கள் ஆக்கங்களை இச்சஞ்சிகையில் பிரசுரிக்க (94)717891887 என்ற வட்ஸ்சப் எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்

MUTUR JMI PVT LTD
SINCE 2016

# ஆசிரியர் மடல்

முத்திதழ் காலாண்டு இதழின் 12 ஆவது சிற்றிதழைத்தான் நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள். மூதூர் பிரதேசத்தில் இருந்து வெளிவரும் இவ்விதழ் கடந்த மூன்று ஆண்டுகளாக மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகத்தின் இலக்கிய வெளியீடாக வெளிவந்தவண்ணம் உள்ளது.

இதுவரை வெளிவந்த இதழ்கள் ஆவண சிற்றிதழாக வெளிவந்தாலும் இந்த இதழ் இலக்கிய சஞ்சிகையாக வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வெளியீடு செய்யப்படுகின்றது. மூத்த மற்றும் இளம் இலக்கிய ஆர்வலர்களின் ஆக்கங்களை உட்பொதிந்து பல்துறைசார்ந்த ஒரு இலக்கிய இதழாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ள இந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் தொடர்பிலான குறைநிறைகளை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலமாக மேலும் சிறப்பான வெளியீடாக முத்திதழ் சஞ்சிகையை எதிர்காலத்தில் வெளியீடு செய்ய உதவியாக அமையும்.

ஒவ்வொரு இலக்கிய படைப்புகளின் பின்னாலும் பாரியதொரு அறிவுத் தேக்கம் வாசகர் பட்டாளத்திற்கு கடத்தப்பட உந்துதலாக அமையும். அந்தவகையில் இந்த இதழும் அதன் ஒரு பகுதியை நிரப்பும் என்று நம்புகின்றேன்.

வட, கிழக்கு மாகாணத்தில் இருந்து பல்வேறு இலக்கிய இதழ்கள் வெளிவந்தபோதும் ஏனைய மாகாணத்தில் தமிழ் பேசும் உறவுகள் இலக்கிய சஞ்சிகைகளில் கூடிய கவனக்குறிப்பை செலுத்தவேண்டும் என்பது நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்து வருகின்றது. இந்த வெற்றிடம் எப்போது நிவர்த்தி செய்யப்படுமோ அப்போது ஈழத்தின் இலக்கிய போக்கு முன்னேற்றம் காணும் பரிணாமத் தருவாயில் இருக்கும்.

தற்போதுள்ள நவீன இலக்கிய போக்கில் பலர் தங்களின் படைப்பை வெறுமனே முகநூல் வாயிலாக மாத்திரமே பிரசுரம் செய்து வருகின்றார்கள். இவர்களின் பல படைப்புகள் இதழுருவில் பதிப்பு செய்யப்பட்டு வாசகர்களின் கைகளுக்கு கொண்டு செல்லவேண்டிய பொறுப்பை நாம் அனைவரும் சுமந்துள்ளோம்.

அத்தோடு ஆக்கங்களுக்கு குறித்த ஆக்கத்திற்குரியவே பொறுப்பாளர் என்பதையும் வாசகர்கள் நினைவில் கொள்ளுங்கள்.

ஜே.எம்.இம்ரான்
முதன்மை ஆசிரியர்



சிறுகதை

# யாதுமாகி

**கதிர் திருச்செல்வம்**

விடிகாலை இருட்டில் முகில்கள் ஒன்றுசேர்ந்து மண்ணைத்தொடத் தொடங்கியபோது அவன் வீட்டுக் குந்தில் இருந்து சீனியில்லா தேநீரை உறுஞ்சிக்கொண்டிருந்தான்.

வீட்டுச் சாளரத்தைத் தொட்டுச் செல்வதற்குத் துடித்த காற்றினால் கால்களில் ஒருசில துளிகள் விழுந்தபோது மனது நேற்றைய இறுக்கத்திலிருந்து இழகிச் செல்வது போன்று அவனுக்குத் தோன்றியது.

நேற்று அவனது தோட்டத்து மணற்றரையில் குந்தியிருந்து நீண்ட நாட்களாகப் பெய்யாத மழை யினை நொந்து மனதினுள் இயற்கையைத் திட்டித் தீர்த்து சாபமிட்டு தனிமையில் நீண்ட நேரம் இருக்கும்போது மனதிலே வெறுமை ஏற்பட்டு அவனது தொண்டைவரை, அழுகை வந்து வந்து போனது.

அவனை அறியாமலே அவனது கண்களின் ஓரங்கள் அவ்வப்போது ஈரமாகியது. அவன் இப்படி மனதை எப்போதும் தனது மனதை காற்றாட விட்டவனில்லை.

தான் தனது உயிராக மதித்து வாழ்ந்து வந்த தன்னுடைய அம்மா, அப்பா சாவடைந்தபோது கூட அவன் ஒருசொட்டுக் கண்ணீர் விடவில்லை. அப்போது 'வாய்விட்டு அழுதுவிடு மனப்பாரம் குறையும்' என அவனது உறவினர்களும் உயிர்நண்பர்களும் சொல்லியும் அவன் இம்மியளவும் அசைந்திருக்கவில்லை. 'அது அவனது செயற்கையான செயற்பாடு' என சிலர் பேசிக்கொண்டதைச் சிலர் வந்து சொன்னது அவனது காதுகளில் காற்றிடைத் தூசியாகத்தான் போனது.

அவனுக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள் ஆறாம், நான்காம் தரத்தில் படிக்கிறார்கள்.

மனையாள் (மூன்றாண்டுகளுக்கு முன்னர்...) படுக்கையிலிருந்து எழுந்தவுடன் சமையலறைப் பாத்திரங்களை எடுத்துச்சென்று வீட்டுமுற்றத்தடியில் நின்ற தேசிமரத்தடியில் போட்டுச் சுத்தம் செய்துகொண்டிருந்தாள். அவ்வேளையில் முத்தபிள்ளை நித்திரையிலிருந்து எழுந்தவுடன் 'அம்மா...' என்று ஓடிவந்து பின்பக்கத்தால் ஆசையாகக் கட்டிப் பிடிக்க, நிலைகுலைந்தவள் சமநிலை தவறி பின்பக்கத்தால் சரிந்தாள். அவள் அப்படி விழுவாள் என்பதை எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல் அவளது தலைக்கு தலையணையாக அந்தக் கருங்கல்தான் இருந்தது.

'அம்மா' என்று அவள் அலறினாள். கணப்பொழுதில் நினைவிழந்துவிட்டாள். எப்படியும் அரைமணி

நேரம் சென்றிருக்கும். அதிகாலையில் தோட்டத்திற்குச் சென்று பயிர்களுக்கு நீர்பாய்ச்சிவிட்டு அவன் வீட்டிற்கு வந்தான்.

அருகில் அமர்ந்திருந்தபடி 'அம்மா...அம்மா...'என்று அம்மாவின் தோளை மகள் தட்டித்தட்டி அழுதுகொண்டிருந்தாள்.. அவனுக்கு தலை சுற்றியது. "ஐயோ..." என்று அலறினான். ஓடிச்சென்று தன்னிலை இழந்து கிடந்தவளை அலாக்காகத் தூக்கி தோளிலே சுமந்தபடி மருத்துவமனை நோக்கி ஓட்டமும் நடையாகச் சென்றான். நல்லவேளையாக தெருவில் வந்த முச்சக்கரவண்டியை நிறுத்தி அதிலே ஏற்றி மருத்துவமனைக்கு விரைந்தான்.

துணைவியை மருத்துவமனையில் சேர்த்தபோது உயிரை மாத்திரம் காப்பாற்ற அவனால் முடிந்திருந்தது. அவள் இயங்க முடியாத நிலைக்கு ஆளானாள். பேசும் திறனையும் இழந்திருந்தாள்.

அன்றிலிருந்து அவள் உயிரோடு படுத்த படுக்கையானாள். தன்னிலை எண்ணி அப்போதுகூட அவன் தனிமையில்கூட அழுதிருக்கவில்லை. அவ்வளவுக்கு கல்நெஞ்சுக்காரன்தான் அவன்.

ஏழு மாதங்களாக வானம் பொய்த்துவிட்டிருந்தது. நட்ட பயிர்களுக்கு நீர்தர மறுத்து கிணறும் மடி சுருக்கிக் கொண்டது. தோட்ட வருமானம்தான் வருவாயென வாழ்ந்தவனுக்கு வாழ வழி தெரியாத நிலை வந்திருந்தது. வானம் இறுக இறுக அவன் மனமோ கரையத் தொடங்கியது. செய்யறி நிலை–யை அடையத் தொடங்கிக் கொண்டிருப்பதை உணரத் தொடங்கினான். மனையாளிற்குக்கூட உணவு கொடுப்பதற்கு திண்டாட வேண்டிய நிலை அவனை வெகுவாகப் பாதித்தது.

கடன் கேட்பதற்கு ஊரில் ஆட்கள் குறைந்து இல்லாது போனார்கள். பிள்ளைகளுக்கு பள்ளியில் கொடுக்கும் உணவு பசிதீர்த்தது. அவர்களது வீட்டுநிலை தெரிந்து பிள்ளைகளின் வகுப்பாசிரியர்கள் கொடுத்துவிடுவது இரவுணவாக நால்வருக்கும் போதுமாக்கப்பட்டிருந்தது. சனி, ஞாயிறுகளிலும் பள்ளி நடக்காதா என அவன் ஏங்கியதும் உண்டு.

*****

நேற்றுப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு தோட்டத்தில் போயிருந்தவனுக்கு, வெயிற்சூடும் சுட்டிருக்கவில்லை. இறுக்கமடைந்த மனம் அவனையறியாமல் கண்ணீரை வெளித்தள்ளியிருந்தது நேற்றுத்தான். ஆனாலும் அவனது மனம் வெறுமையுடன் இறுக்க மாகத்தான் இருந்தது.

"அவனது அவனையறியாக் கண்ணீர்தான் வானிலிருந்து அவனது கால்களை நனைக்கிறதோ இன்று." என்று தேநீர்க் குவளையுடன் இருந்த அவன் ஒரு கணம் எண்ணாமலுமில்லை. துளிகள் பாட்டமாகியது. மழை உரக்கத் தொடங்கியது. மனது மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது.

நித்திரையில் கிடந்த பிள்ளைகள், தம்மீது விழுந்த நீரத்துளிகளால் திடுக்கிட்டு எழுந்தார்கள். உக்கிப் போயிருந்த கூரைக்கிடுகளின் ஓட்டைகளினால் ஒழுகத் தொடங்கியிருந்தது. வீடு முழுவதும் நனைக்காதவாறு சமயலறையில் இருக்கும் சட்டிகளை எடுத்துவந்து ஒழுகும் இடங்களில் இருவரும் வைத்து வீடு முழுவதும் நனையாதவாறு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது பிள்ளை இருவரது பொத்தகங்களையும் நனையாதவாறு நீர் விழாத இடமாகப் பார்த்து எடுத்து வைத்தாள். அம்மாவின் கால்களில் விழுந்த நீர்துளிகள் காலை ஈரமாக்கிக் கொண்டிருந்தன. ஒரு மணிநேரமாக கொட்டோ கொட்டென மழை பெய்து தீர்த்துக் கொண்டிருந்தது.

மூத்தவள் அப்பா அருகில் குந்தில் குந்தியிருந்து முற்றத்தினால் வழிந்து வார்ந்தோடும் நீரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இளையவள் "அம்மா... அம்மா..." என்று கண் மூடியபடி படுத்திருக்கும் அம்மாவின் தோள்களை உசிப்பிக்கொண்டிருந்தாள்.

உள்ளே கால்களில் பட்டுக்கொண்டிருக்கும் ஈரத்தினால் மனையாள் குளிரேறி மரத்துக் கொண்டிருப்பது தெரியாமல் வெளியே மகிழ்ச்சியில் திளைத்தபடியிருந்தான் அவன்.

ஈரைந்து மாதம் என்னை
எடையோடு சுமந்தவள்...

நிலையறியும் காலம் வரை
எனக்கென வாழ்பவள்...

நான் உறங்குகின்ற வேளை
அவள் விழித்துக் கொள்வாள்...

என் பசியைப் போக்க
அவள் உதிரத்தை அன்போடு
பாலாக ஊட்டியவள் அவள்...

அவளைச் சிறுகச் சிறுக உருக்கி
என்னை ஒளியூட்டிய தேவதையவள்...

எனக்காய் தினம் தினம் உழைத்து
பழுக்கக் காய்ச்சிய அவள்
விரல்களை பற்றி பிடிக்கும்
அந்த ஓர் நொடியில் உணர்கிறேன்
அவள் எனக்கு வரமாக
கிடைத்த பொக்கிஷம் என்று...

ஈர் தசாப்தமாய் தொடர்கிறது
எனக்கான அவள் தியாகங்கள்...

இவ்வாறெல்லாம் செய்யும் தாய்க்கு
என்ன கைம்மாறு செய்வதென்றே
புரியவில்லை...

தொழுகையின் சுஜூதில் அவளுக்காய்
கேட்கும் ஒற்றைப் பிரார்த்தனையைத் தவிர...

அன்சார் பாத்திமா நுஸ்றா
தோப்பூர்

# என் தாய்...



கவிதை

# கடல் வானம்

அஷ்ரபா நூர்தீன் - திருமலை

எப்போதும்
என் கூடவே வருகிறது வானம்
பயணத்தில் ஓடிக்கொண்டும்
நிற்கையில் நின்றும்
துணைபோலத் தொடரும்
பென்னம்பெரிய நீலக்குடை அது

அறைக்குள் இருக்கும் எனை
ஜன்னல் கம்பிகளினூடு
கண்காணிக்கிறது.
இனிய தோழமையின் பிரகாசம்
வழிய.

ஓடும் மேகக் குவியலையும்
ஒளிரும் வெள்ளிப் பூக்களையும்
வண்ண நிலவையும்
வரமாய் வைத்திருக்கிறது
கண்ணுக்குத் தெரியாக்
காற்றையும் தான்.
நான் ரசிக்க
மெய் மறக்க


மாறி மாறி மனதை மாற்றி மாற்றி
வாழும் உறவுகளைப் போல் அல்ல

என்றும் மாறா மனதுடன்
மண்ணையும் மனிதரையும் காக்கும்
மேகக்கப்பலும் தாரகை மீன்களும்
ஓடிக் களிக்கும் கடல் வானம்.



# பெரிடொரைற் என்னும் கறுப்பு பச்சையம்

## காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடும் மலைகள்



**ஏ.எம்.றியாஸ் அகமட்**

(சிரேஸ்ட விரிவுரையாளர், தலைவர், உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

*ஓமான் எங்கும் மலைகளின் நிறம் கறுப்பு. அல் ஹாஜரின் நிறம் கறுப்பு. இந்த மலைகள் சுவர்க்கம் என்றேன். அதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. இந்த மலைகளில் மரங்கள் இல்லை. ஆனால் மலைகள் மரங்களின் வேலையைச் செய்கிறது. அல்ஹாஜரின் நிறம் கறுப்பு. பசுமையின் நிறம் கறுப்பு.*

### அல்ஹாஜர் மலைத்தொடர்

*புவியின் இரண்டு கவசத் தகடுகள் ஒன்றொடொன்று மோதும்போது அல்லது ஒருங்கும்போது மலைகள் உருவாகின்றன. இதன் காரணமாகவே மலைகள் எப்போதும் கவசத் தகடுகளின் விளிம்புகளிலேயே இருக்கும். இந்த மலைத் தொடர் 30 மில்லியன் வருடங்களுக்கு முன் அரேபிய, இயுரேசிய புவிக் கவசத்தகடுகளின் ஓரங்களில் மோதல் தொடங்கியதனாலேயே உருவானதாக கருதப்படுகின்றது. 145 மில்லியன் தொடக்கம் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்திய, கிறற்றாசியஸ் யுகத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று வீழ்படிவான படைகள் உள்ளெடுக்கப்பட்டு, அந்தப் படைகளின்மீது உருவான மலைத் தொடரே இது. சுமார் 45 மில்லியன் வருடங்களுக்கு முன் ஆழங்குறைந்த கடற்பரப்பில் அல்ஹாஜர் மலைத்தொடர் முற்றாக மூடப்பட்டதாக காணப்பட்டிருக்கின்றது.*

*ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குடியரசிலிருந்து தொடங்கி ஓமானின் வடக்குப் பகுதி வரை 700 கிலோமீற்றர் நீளமும், 100 கிலோமீற்றர் அகலமும் கொண்டமைந்து காணப்படுகின்றது. இதன் சராசரி உயரம் 4000 அடிகளாகும்.*




அதி உயரமான இடம் ஸம்ஸ் சிகரம். 10000 அடி. அதன் வேர்ப் பகுதி புவியோட்டிற்குக் கீழ் 37 தொடக்கம் 70 கிலோமீற்றர் பரவிக் காணப்படுகின்றது. இது பல நதி களையும், நதிப்படுக்கைகளையும் உருவாக்கி இருக்கின்றது. பலநூற்றுக் கணக்கான இனத் தாவரங்களையும், விலங்கினங்களையும் கொண்டது.

அடிப்படையில் விலங்கியலாளனான நான், மரங்களுக்காக எனது வாழ் நாட்களையே ஒப்படைத்திருக்கின் றேன் என்றே கூறலாம். ஏனெனில் மரங்களின்றி எதுவுமேயில்லை. மரங்கள் தரும் உணவு, உடை, மருந்து. கட்டடப்பொருட்கள், சூழலியற் சேவைகள் போன்றவை களுக்காக மட்டும் அவை நேசிக் கப்பட வேண்டியவைகள் அல்ல. மாறாக அவைகள் வளிமண்டலத் தில் காணப்படும் காபனீரொட் சைட்டு வாயுவை உறிஞ்சி, சமனி லைப்படுத்தி, பசுமைவீட்டுத் தாக்கத்திலிருந்து தவிர்த்து, பூமி வெப்பமடைதலையும் தடுக்கின்றது. பூகோளம் வெப்பமானால் பனிப் பாறைகள் உருகி கடல் மட்டம் உயரும். அதேவேளை அதிகரித்த வெப்பநிலையின் காரணமாக, கடல்நீர் விரிவடைந்து கடல் மட்டம் உயரும். கடல் அரிப்பு ஏற்படும். பல கரையோரங்கள் பாதிக்கப்படும். உயிரி னங்களும் பாதிக்கப்படும். பல்வேறு அனர்த்தங்களும் ஏற்படும்.

மரங்களைப்போன்று மலைகளும் வளி மண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டை உறிஞ்சுகின்றன என்றால் வியப்பாகத் தான் இருக்கும். அதுவும் உலகில் மிகச் சில இடங்களிலேயே இவ்வாறான மலைகள் காணப்படுகின்றன. ஓமான் அல்ஹாஜர் மலைகள் அவ்வாறான



மலைகளில் பெரியதும், முக்கியமானது மாகும் என்றால் மேலும் வியப்பாகத் தான் இருக்கும். அதற்கு அந்த கறுப்பு தான் காரணமாகும். அந்தக் கறுப்பி லுள்ள இரசாயனப் பொருள்தான் காரணமாகும்.

வளிமண்டலத்திலுள்ள காபனீரொட் சைட்டு வாயுவை, பெரிடொரைற் என்ற பாறை உறிஞ்சி, அதனைத் திண்மமாக்குகின்றது. இது காபன் கனியமாக்கல் (காபன் மினறலைசேசன்) எனப்படும். வளியிலுள்ள காபனீரொட் சைட்டு வாயுவை கைப்பற்றல், அதனை உறிஞ்சல், பின்னர் அதனை நடுநிலையாக்கல் போன்ற படிமுறை களுக்கூடாக இந்தக் கனிப்பொருளாக் கம் அல்லது கல்லாக்கம் நடை பெறுகின்றது.

இந்த திண்மக் காபன்கள் எங்கும் செல்லவும் முடியாது அல்லது அசையவும் முடியாது. ஓரிடத்தி லேயே இருப்பவையாகும்.

காபனை உறிஞ்சும் இவ்வகையான பெரிடொரைற் பாறைகள் உலகில் வட கலிபோர்னியா. பபுவா நியுகினியா, அல்பேனியா போன்ற நாடுகளில்தான் காணப்படுகின்றன. ஆனால் அங்கு சிறியளவிலேதான்; காணப்படுகின்றன. அனால் உலகில் ஓமானிலேயே பாரியளவிலும் நாடு பூராகவும் காணப்படுகின்றன.

காபனீரொட்சைட்டை உறிஞ்சி, காபனை கல்லாக்கும் பெரிடொரைற் பாறைகள் வழமையாக புவியோட்டின் கீழே பல கிலோமீற்றர்கள் ஆழத்தில் படையாகக் காணப்படும். ஆனால் ஓமானின் அல்ஹாஜர் பகுதிகளில், புவியின் கவசத் தகடு களினால் உருவாக்கப்பட்ட விசையின் காரணமாக, பெரிடொரைற் படை *100* மில்லியன் வருடங்களுக்கு முன்பிருந்தே புவிக்கு மேலே உயர்த்தப்படத் தொடங்கின.

ஓமானின் வட பகுதியில் *322km* நீளமும். *38km* அகலமும், பல கிலோமீற்றர்கள் ஆழமும் கொண்ட வளிமண்டலத்திற்கு வெளிவிடப் படுகின்ற காபனீரொட்சைட்டை உறிஞ்சி கல்லாக்குகின்ற கறுப்பு நிறமான பெரிடொரைற் மலைகள் காணப்படுகின்றன.
மேலும் இப்றாவின் சுற்றயற் பகுதிகளிலும், மஸ்கட் பகுதிகளிலம் இந்தக் கரிய பாறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இயற்கையாக பூமியின் அதிக ஆழத்தில் காணப்படும் இப்



> ஓமானின் கறுத்தப் பாறைகள் வித்தியாசமானவை, சிறப்பானவை மரங்கள் எதுவுமேயற்ற பசுமையான கறுத்தப் பாறைகள். பூமியைச் சூடாக்கும் கரியமில வாயுவைக் கவர்ந்து கல்லாக மாற்றும் கறுத்தப் பாறைகள் பல யுகாந்திரங்களில் வளியின் கரியமில வாயுவை உறிஞ்சிச் சேமிக்கும் கறுத்தப் பாறைகள் காலநிலை மாற்றத்திற்கெதிராக பூமியை போராடிக் காத்திடும் ஓமானின் அல்ஹாஜர் அற்புத கறுத்தப் பாறைகளின் கதை.

பாறைகள்.பூமியின் மேற்பரப்பில் உயர்த்தப்பட்டு வளியுடனும், நீருடனும் தொடுகையுறும்போது, அதிக இரசாயன அழுத்தம் கொண்ட பாரிய மின்கலமாக தொழிற்படத் தொடங்கி, அவைகளில் காபனீரொட்சைட்டு வாயுவை உறிஞ்சி அவைகளை காபன் கனிப்பொருள் அல்லது காபன் கற்களாக்குகின்றன.

இதன் காரணமாக ஓமானின் இந்த மலைகள் ஒரு வருடத்திற்கு ஒரு பில்லியன் தொன் (ஒரு இலட்சம் கோடி) கிலோகிராம் அளவுள்ள வளிமண்டல காபனீரொட்சைட்டு வாயுக்களை கல்லாக்குகின்றன. ஒரு வருடத்திற்கான

*உலகின் மொத்த காபனீரொட்சைட்டு வாயு வெளிவிடுகை 40 பில்லியன் தொன் கிலோகிராமாகும். ஓமானின் அல்ஹாஜர் மலைகள் வெளிவிடப் படும் உலகின் மொத்த காபனீரொட்சைட் அளவில் 2.5 சதவீதத்தினை உறிஞ்சுகின்றன. இது 50 கோடி வளர்ந்த, பெரிய மரங்கள் ஒரு வருடத்தின் காபனீரொடடைசைட்டை உறுஞ்சுவதற்கு சமனானது.*

*இதன் காரணமாகவே 1990 களிலிருந்து ஓமானானது, பல்வேறு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், புவி பொறியியல், புவியியல், இரசாயன பொறியியல் ஆய்வாளர்களை ஈர்த்து வருகின்றது. இந்த இயற்கையான பொறிமுறையை, செயற்கையாக, பாரியளவில், செலவு குறைத்து எவ்வாறு வினைத்திறனாக செய்யலாம் என்பதில் உலகில் இருபதுக்கு மேற்பட்ட ஆய்வுகள் நடை பெறுகின்றன. இதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகளும், பல்வேறு பெரிய நிறுவனங்களும் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளன. கொலம்பிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீற்றர் கெலமென், டேவிட் கோல்ட் பெக், அலிஸ்ஸா பாக் போன்றோரும், மற்றும் நோஹ் டிச் (காபன் அகற்றும் ஆய்வுநிலையம், பெர்க்லி. கலிபோர்னியா), றொஜர் ஐன்ஸ் (கலிபோர்னியா) போன்றோர் இந்த ஆய்வுகளில் முன்னிலை வகிக்கும் சிலருக்கு உதாரணங் களாகும். இயற்கையில் இந்த மலைகள் வேகமாக வளிமண்டல காபனிரொட்சைட்டு வாயுவை கல்லாக்குகின்றன.*





*செயற்கையான முறையில் இயற்கையான காபன் கல்லாக்கும் அல்லது கனிப்பொருளாக்கும் வேகத்தை எட்டுவது என்பதுதான் இதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவாலாகும். அதேவேளை ஓமானின் அல்ஹாஜர் பகுதி கொண்டிருக்கும் பல்வேறு நீரூற்றுக்களும், சுடுநீரூற்றுக்களும் காபனீரொட் சைட்டைக் கல்லாக்குகின்றன என அறியப்பட்டுள்ளன.*

*காபனீரொட்சைட்டு போன்ற, பசுமைவீட்டு வாயுக்கள், பூமியின் வளிமண்டலத்திலள்ள மெல்லிய போர்வையாகி, இப் பூமியின் வெப்பத்தை ஒரே சீராக பேணிப், பாதுகாத்து உயிர்களையும், உலகத்தையும் இயங்க வைக்கின்றன. வளிமண்டலத்தின் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கும் போது, போர்வை அதிக வெப்பத்தைத் தக்கவைத்து பூமி வெப்பமுறலுக்கு வழிவகுக்கும். 1800 களின் கைத்தொழிற் புரட்சியின்போது வளிமண்ட லத்தின் காபனீரொட்சைட்டு வாயுவின் செறிவு 280 பீபீஎம் (பார்ட்ஸ் பெ*

*மில்லியன்). இந்த அளவு 2019ம் ஆண்டு, 415 பீபீஎம் ஆக மாறியுள்ளது. மேலதிகமான காபனிரொட்சைட்டை வேகமாகவும், வினைத்திறனாகவும் அகற்றி இந்த உலகத்தை காக்க வேண்டிய தேவையும் எமக்குள்ளது.*

*ஓமானின் மிகப் பரந்த கறுத்த நிற பெடொரைற் மலைகள் இன்றும் அதிசயமாக இருக்கின்றன. இறைவனின் அற்புதமான படைப்புக்களில் இதுவும் ஒன்று.*

*ஓமானின் மஸ்கட் பிராந்தியத்தின், றுவி என்னும் இடத்திற்கு அருகிலுள்ள வாதி அல்கபீர் என்னும் இடத்தில், அல்ஹாஜர் மலையடிவாரத்திலுள்ள மனைவியின் சகோதரியின் வீட்டில்தான் தங்கியிருந்தோம். அந்த வீடு ஐந்து தளங்களைக் கொண்ட கட்டடத் தொகுதி. நாங்கள் இரண்டாவது தளத்தில். வீட்டிற்கும் மலைக்கும் சுமார 30 அடிகளே இடைவெளி இருக்கும். எங்களது அறையில் தூங்கும் போதும், விழிக்கும் பொதெல்லாம் அல்ஹாஜர்தான் தரிசனம் கொடுக்கும். எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அந்த அல்ஹாஜருடன் நேரங்களை செலவிட்டேன். ஏனெனில் இலட்சக்கணக்கில் நடப்பட்ட பசுமையான நெடிதுயர்ந்த மரங்கள், அரூபமாய் கருமையாய் அந்த மலைகளில் தெரிந்துகொண்டிருந்தன.*





**செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை**
**காணின் கிழக்காம் தலை**
**குறள் (488) க்கு ஏற்ப - வஞ்சி விருத்தம்**

காலம் வரும்வரை காத்திருப்பாய்
சாலம் காட்டியே சாய்த்தாலும்
மேலும் பொறுத்திட மிளிர்ந்திடுவாய்
ஞாலம் உரைத்திடும் நற்செய்தி

பகைவன் கொடுத்திடும் பெருந்துன்பம்
நகைத்துக் கொண்டு நீ நகர்ந்தாலே
வகையாய் மாட்டுவான் வருந்தாதே
நிகழும் காத்திரு நிலை பெறவே

கொடுக்கும் துன்பத்தைக் கொள்ளாதே
எடுத்தே எறிந்திட எதிரியுந்தான்
அடுத்து தொலைந்திட அவன்போவான்
படித்தே அறிந்திடு பாடமதை

ஆற்றும் செயலினை அயலானும்
தோற்க அடித்திடத் துணிவாக
ஏற்ற நேரமும் எதிர்பார்த்துத்
தோற்று ஓடிடத் துரத்திடுவாய்.

**- தமிழ்நெஞ்சம் அமின்,**
**பிரான்சு**

# ஆசானின் பெருமை

*பாலராய் பள்ளிசென்றோம்*
*பக்குவமாய் பாசத்துடன்*
*பாடத்தை கற்றுதந்த*
*ஆசானே!*

*மெழுகாய் தனை எரித்து*
*மேதையாய் எனை*
*மேடையதில் ஏற்றி*
*மெய்சிலிர்க்க வைத்த*
*ஆசானே!*

*உன் அறிவால்*
*அறிவை உலகறிய*
*சீர்கல்வி தனை*
*சீராய் தந்து*
*சிற்பமாய் எனை*
*செதுக்கியே ஆசானே!*

*எண்ணற்ற நல்ல*
*எண்ணங்களை*
*எமக்களிக்க*
*ஏடுகளாய்*
*வையகத்தில் வந்த*
*வைரங்களே! உங்கள்*
*புகழ் பாடிட*
*வார்த்தைகள் ஏதுமில்லை!*

**சஸ்னா சனீம்**
**அக்கரைச்சேனை, மூதூர்**

மருத்துவம்



# குழந்தைப்பேற்றின் பின்னரான மன அழுத்தமும் நிவாரணமும்

**Dr ஜலீலா முஸம்மில்**
வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை-ஏறாவூர்

பெண்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் பல்வேறுபட்ட சவால்களையும், பிரச்சினைகளையும் சந்திக்கிறார்கள். ஒரு பெண் தாய்மை அடையும் பொழுது புதிய பிறவி எடுக்கிறாள் என்று நம் மூத்தவர்கள் உரைத்துச் சென்றது முற்றிலும் உண்மை.

எல்லாப் பெண்களுக்கும் தாய்மை அடையும் அனுபவம் ஒரே விதமாக அமைவதில்லை. பலருக்கு தாய்மை அடையும் பருவம் மகிழ்ச்சிமிக்க காலமாக அமைந்தாலும், சில பெண்களுக்கு நிறைய சிரமங்கள், மனக் குழப்பங்கள் நிறைந்த காலமாகவே இருக்கிறது. இந்தக் காலங்களில் ஏற்படும் உடல் உள மாற்றங்களை நம் கண்கள் அனைவரும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அதன் மூலம் பிரசவத்திற்குப் பின் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிப்பது பற்றி முன்னரே அவர்கள் ஆயத்தமாகக் கூடும். எனவே பிரசவத்திற்குப் பிறகு தாய்க்கு ஏற்படும் சிக்கல்கள், அதற்கான அறிகுறிகள் மற்றும் தீர்வுகள் பற்றி அறிந்து கொள்வோம்.

ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு, பொதுவாக குடும்பத்தின் மொத்த கவனமும் குழந்தையின் பக்கம் திரும்பி விடுவதைக் காணலாம். குழந்தையின் நல்வாழ்வில் அதிக சிரத்தை சார்ந்ததாகவே எல்லா நடவடிக்கைகளும் காணப்படுகின்றன, ஆனால் தாயின் ஆரோக்கியம் பெரும்பாலும் முன்னுரிமை குறைந்து விடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. பெரும்பாலான தாய்மார்கள் மகப்பேறு மருத்துவரிடமிருந்து பிரசவத்திற்குப் பிறகான ஆலோசனைகளைப் பெறுவதில்லை. ஆயினும் மருத்துவ வழிகாட்டுதல்களில்

படி பிரசவத்திற்கு 3 வாரங்களுக்குள் பெண் ஆலோசனை பெறவேண்டும். பெரும்பாலும் தாய் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்குச் சென்ற பிறகே அனேக சிக்கல்கள் ஆரம்பிக்கின்றன.

பிரசவத்திற்குப் பின்னரான முதல் ஆறு வாரங்கள் மிகவும் ஆபத்தானவை; பெண்கள் மற்றும் அவர்களது கணவன், குடும்ப அங்கத்தவர்கள் அல்லது ஆதரவாக இருப்பவர்கள் முதல் வாரத்தில் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆனால் கர்ப்பம் தொடர்பான சிக்கல்கள் குழந்தை பெற்ற ஒரு வருடம் வரை ஏற்படலாம்.

பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் பல அறிகுறிகள் மிகவும் தீவிரமான மருத்துவச் சிக்கல்களை எமக்கு அறிவிக்கும். அவற்றைப் பொது போக்காக எண்ணாது பிரசவித்த பெண்கள் நலத்தில் உடனடிக் கவனம் செலுத்துதல் அவசியம்.

**அவற்றில்**

- தீராத தலைவலி
- தலைச்சுற்றல் அல்லது மயக்கம்
- பார்வை மாற்றங்கள்
- 100.4 டிகிரி அல்லது அதற்கு மேற்பட்ட காய்ச்சல்
- முகம் அல்லது கைகளின் தீவிர வீக்கம்
- சுவாசிப்பதில் சிரமம்
- மார்பு வலி அல்லது வேகமாக துடிக்கும் இதயம்
- கடுமையான குமட்டல் மற்றும் வாந்தி
- கடுமையான வயிற்று வலி
- ஒரு கை அல்லது காலில் கடுமையான வீக்கம் மற்றும் சிவத்தல் அல்லது வலி
- கடுமையான பிறப்புறுப்பு இரத்தப்போக்கு அல்லது வெளியேற்றம்
- அதிக சோர்வு.

இந்த நிலைமைகளில் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று குணங்குறிகளைத் தெரியப்படுத்திச் சிகிச்சை பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும்.

நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் பயனுள்ள தகவல்களை வழங்குகிறது, இது கர்ப்ப காலத்தில் மற்றும் கர்ப்பத்திற்குப் பிறகு பெண்களுக்கு எச்சரிக்கை அறிகுறிகளை அறிமுகப்படுத்த உதவுகிறது. கர்ப்பகாலத்தில் சில பெண்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்றவை, பிரசவத்திற்குப் பின்னரும் தொடரும் அபாயமுண்டு. அவசியமாக இவ்வாறானவர்களுக்கான நெருக்கமான கண்காணிப்பு தேவை. உயர் இரத்த அழுத்தம் அல்லது குடும்ப வரலாற்றைக் கொண்ட பெண்கள் தங்கள் இரத்த அழுத்தத்தை அடிக்கடி பரிசோதித்து கண்காணித்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறே பிரசவித்த பெண்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புகளும் அதிகளவில் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. ஒரு அதிர்ச்சிகரமான பிறப்பனுபவமோ, மனச்சோர்வோ, பதட்டமோ மற்றும் பிந்தைய மன உளைச்சலுக்கு வழிவகுக்கும். மகப்பேற்றுக்குப் பிறகான பரிசோதனையின் போது மனச்சோர்வு உள்ளதா என அனைத்துப் பெண்களுக்கும் பரிசோதிக்கப்பட வேண்டும்.

சில பெண்கள் குழந்தை பெற்ற பிறகு சோகமாக உணர்வார்கள், அதிகமாக அழுவார்கள். இவற்றைச் சாதாரணமான நிகழ்வாகக் கொள்ள முடியும். சோகம் மற்றும் நம்பிக்கையற்ற உணர்வுகள் தொடர்ந்தாலோ அல்லது தானொரு நல்ல தாய் இல்லை என்று நினைத்து வருந்தினாலோ அல்லது அவர்கள் வாழ்க்கைப்

பிடிமானமிழந்து தொடர்ந்து கவலைப்பட்டாலும் நிச்சயமாக சிகிச்சை பெறவேண்டும்.

குழந்தையையோ கணவனையோ குடும்ப உறுப்பினர்களையோ காயப்படுத்தும் எண்ணங்களும், சாதாரணமற்ற வித்தியாசமான எண்ணங்களும் தோன்றினால், அதிலிருந்து அவர்களால் விடுபட முடியாமல் போனால் உடனடியாக வைத்தியரின் ஆலோசனை பெற வேண்டும்.

மகப்பேற்றின் பின்னர் பெண் களுக்கு இரண்டு வகையான உள நிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

***1)Postpartum Blue***

இது குழந்தை பிறந்த பெண்ணின் மனதில் ஏற்படும் சிறிய சஞ்சலத்தைக் குறிக்கும். சம்பந்தமில்லாமல் அழுவது, சம்பந்தமில்லாமல் கவலைப் படுவது, சின்னச் சின்ன விடயங்களுக்கு எரிந்து விழுவது போன்ற மாதிரியான உளமாற் றங்கள் இந்த நிலையில் ஏற்படும். இது அநேகமாக ஏற்பட்டு சிறிது காலத்திலேயே மறைந்துவிடும். இதற்குத் தேவையான ஒரே மருந்து கணவனினதும், உறவினர்களினதும் அன்பும் அரவணைப்பும்தான்.

***2) Postpartum Depression***

*Postpartum blue* வை விட இந்த நிலை தீவிரமானது. இது ஏற்பட்டு சரியாகக் கவனிக்கப்படாமல் , சிகிச்சை அளிக்கப்படாது விடும்போது தான் தற்கொலை செய்தல், குழந்தையைக் கொலை செய்தல் போன்ற சிக்கலான நிலைக்கு அப்பெண்கள் உள்ளாகக் கூடும்.



இந்நோயின் அறிகுறிகள் பெரும்பாலும் *Postpartum blue* நிலையின் அறிகுறிகள் தான். ஆயினும் அவை தீவிரம் கொண்ட தாகவும் நீண்ட நாட்கள் தொடர்ந்து நீடித்து இருப்பவையாகவும் இருக்கும்.

இரண்டு நிலையையும் வேறு பிரித்து அறிவது முடியாதது என்பதால் , ஆரம்ப நிலையிலேயே மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டால் தற்கொலை, குழந்தைக் கொலை போன்றவை ஏற்படாது தடுக்கலாம். குழந்தை பிறந்து முதல் வருடத்தினுள் மேலே சொன்ன ஏதாவது அறிகுறிகள் ஏற்படல் கூடும்.

புரியாத அலறல்கள், மூளைக்குள் வேறு யாரோ புகுந்தது போன்ற ஒரு உணர்வு. காரணமே இல்லாமல் தலையணைக்குள் முகத்தை புதைத்து அழும் தருணங்கள், ஏதேனும் வேலை செய்து கொண்டிருக் கும் வேளையில், திடீரென அதனை அப்படியே விட்டு விட்டு மனம் வேறொரு பாதையில் செல்லுதல், கண்ணி மைக்காது எதையோ வெறித்துப்பார்த்துக் கொண்டே இருத்தல், காதுகளில் யாரோ அலறுவதும் பேசுவதும் ஏசுவதும் பலமாக கேட்பது போல் இருத்தல், "நீ எதுக்குமே லாயக்கில்லை. உனக்கு எதுவுமே தெரியல. குழந்தையை வளர்க்கிறதெல்லாம் உனக்கு வராது. இதுக்கான திறமையெல்லாம் இல்லாம, தயாராகாம எதுக்கு உனக்கு இந்த குழந்தை?" போன்ற எதிர்மறையான அசரீரியான குரல்கள் ஒலிப்பது போன்ற

உணர்வுகள் இந்த நோயின் காரணமாக விளைகின்ற அறிகுறிகள்.

எதற்காக வாழவேண்டும் என்று தொடங்கி சில நேரங்களில் தற்கொலை எண்ணங்களும் உருவாகும். உள்ளிருக்கும் எண்ணங்களை பகிர, நம்பிக்கை யான நபர்கள் யாருமில்லாமல் போகையில், இந்த மன அழுத்தம் அதிகமாக விடும். குழந்தையின் அழுகுரல் கேட்கும்போதெல்லாம், ஒரு எரிச்சல் வந்து போகும். பாலூட்டிக் கொண்டிருந்த போதும், அடிக்கடி பட்டினி கிடப்பார் கள். இதனால் எடை இழக்கவும் நேரிடும். ஒருவரை மனதளவில் மட்டு மில்லாமல் உடலளவிலும் பாதிக்கும் சக்தியுடையது இந்நோய்.



சமூகத்தில் இந்நிலை மிகவும் பாரதூரமாகவே கருதப்படுகிறது. இவ்வாறான நிலைகள் தெரியவரும் போது மனநல வியாதி/பைத்தியம் என்று சமூகம் பட்டங்கட்டி விடுவார்கள் என்ற பயம் இப்போதும் இருக்கிறது. மனநோயா ளிக்கு நம் சமூகத்தில் இருக்கும் இடம், எவ்வாறு அவர்கள் நடத்தப்படு கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. உள நோய் என்பதும் உடல் நோய்களைப்போல ஒரு நோய்தான் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். கேலியாகவும் இழிவாகவும் அவர்களைப் பார்ப்பது நமக்கு இழுக்கன்றி அவர்களுக்கு அல்ல.

குழந்தைப்பேற்றுக்கு பின் சில பெண்களை ஆட்கொள்ளும் மன அழுத்தம் இது. இதனை ஒரு பொழுதும் நோய் எனக் கூறமுடியாது. அவர்கள் நோயாளியும் அல்ல. இது ஒரு விதமான மனநிலை. வாழ்க்கையின் கடினமான ஒரு பருவமாகவே இதனைக் கருத வேண்டும்.



**முக்கிய குணங்குறிகள்**

♦ அளவுக்கதிகமான பயம்

♦ அதிகமான மன அழுத்தத்தை உணர்தல்

♦ தேவையில்லாத பயத்துடன் நெஞ்சு படபடப்பு

♦ சின்ன சின்ன விடயங்களுக்கே எரிந்து விழுந்து கோபப்படுதல்

♦ தூக்கமின்மை

♦ அதிகமாக உணர்ச்சிவசப்படுதல்

♦ தன்னைப்பற்றி யாரோ தப்பாக பேசுவது போல உணர்தல்

♦ தன்னை அல்லது குழந்தையை யாரோ கொலை செய்ய முயற்சிப்பது போல உணர்தல்

♦ செத்துவிடலாம் போன்ற எண்ணம் தோன்றுதல்

♦ குழந்தை ஒரு பாரமாக உணர்தல்

♦ குழந்தையைப்பார்த்து கோபப்படுதல்

குழந்தை பிறந்த பின் ஏற்படும் இந்நோய்களுக்கு முக்கிய காரணமாக இருப்பது சுற்றிவர இருக்கும் பொறுப்பற்ற சூழலும் கவனிப்பாரற்ற தன்மையும் உள உடல் ரீதியான ஆதரவின்மையுமே ஆகும்.

குழந்தை பெற்ற மனைவியின் பலவீனமான நிலை, இரவிரவாக கண் விழித்தலும் குழந்தைக்குப் பாலூட்டலும், குழந்தைப் பராமரிப்பு போன்ற விடயங்களை ஆண்கள் புரிந்துகொள்ளாமல், உதவி செய்யாமல் அவளை மேலும் அழுத்தத்துக்கு உள்ளாக்குவது இந்த நோய்களின் தீவிரம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன.

அவளுக்கான ஓய்வு, ஆறுதல், மன அமைதிக்கான தீர்வுகளைப் பெற்றுத் தராமல் அவளுடைய நலனில் அக்கறை செலுத்தாத உறவினர்களாக இருப்பது தவறாகும். குழந்தையைப் பார்க்கப் போகின்ற உறவினர்களின் தொல்லையும் ஒரு விதத்தில் இதற்கு காரணமாக அமைகின்றன முன்னைய காலத்தில் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது குழந்தையையும் தாயையும் கவனிக்க பலர் இருந்ததால் தாய்க்கு ஓரளவு ஓய்வு கிடைத்து, வருகின்ற உறவினர்களோடு நேரம் ஒதுக்க சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் இப்போது அப்படிக் கிடையாது. இரவு முழுக்க கண்விழித்த தாய், பகலில் குழந்தை கண்ணயரும் நேரம் பார்த்து, தானும் உறங்க சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இவ்வாறான விருந்தினர்களின் வருகையும் குழந்தை பராமரிப்புக்கான வேலைகளும் மேலும் அவளது ஓய்வுக்கான தடையாக அமைகின்றன. அத்துடன் உறவினர்கள் பல்வேறுபட்ட அறிவுரைகள் சம்பிரதாய சடங்குகள் என்று இன்னும் சங்கடத்திற்கு உள்ளாக்குகின்றனர். பிறந்த குழந்தையை பற்றி விமர்சிப்பதும் அவளுடைய மன அழுத்தத்திற்கு மேலும் ஒரு காரணமாக அமைகிறது.

இன்னும் குடிகார கணவன்,அவனது வேலைகளில் பங்கெடுக்காத உறவினர்கள் என்று பல்வேறுபட்ட காரணங்களை கூறலாம். எனவே ஒவ்வொரு கணவனும் தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், குழந்தையைப் பொறுப்பெடுத்துவிட்டு அம்மாவைக் கொஞ்சம் ஓய்வெடுக்கவிட்டாலே அநேகமான உளவியல் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அதேபோல் குழந்தை பிறந்ததும் தேவையில்லாத குடும்பப் பிரச்சினைகளையும், பொருளாதாரப் பிரச்சினைகளையும் குழந்தையின் தாயிடம் கொடுக்காமல் கணவன் அல்லது குடும்பத்தில் வேறு ஒருவர் முகாமைத்துவம் செய்தல் சிறந்தது.


குழந்தை பிறந்தபின் அவளின் உடல்ரீதியாக பல பிரச்சினைகளும் தாய்க்கு உண்டாகலாம். பால் கட்டுதல் என்பது மார்பகங்களில் பால் தேங்குவதால் ஏற்படும் கடுமையான வலியாகும். இது தாங்கவே முடியாத வேதனையாக இருக்கும். மார்பகங்கள் கடும்பாரமாகவும் காணப்படும். அதேபோல் குழந்தைப் பிறப்பின் போது ஏற்பட்ட காயங்கள் ஆறாமல் வலி இருக்கலாம், கிருமித்தொற்று ஏற்படலாம். இந்த வலிகள் ஒரு பெண்ணின் அழுத்தத்தை இன்னும் அதிகரிக்கும். இவற்றுக்கெல்லாம் இப்போது வைத்தியசாலைகளில் போதிய சிகிச்சைமுறை உள்ளது. இந்த வலிகளைப் பூரணமாகக் குறைத்துவிடுமளவுக்கு மருத்துவம் வளர்ந்துள்ளது. ஆகவே இப்படியான பிரச்சினைகள் ஏற்பட்டால், அந்தக்கால நடைமுறை வைத்தியம் செய்யாமல் உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக கர்ப்பத்தைத் திட்டமிடும்போது துணையுடன் விசேட வைத்திய ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளுங்கள். கர்ப்பத்திற்கு முன் இதய-ஆரோக்கியமான ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகளுடன் உங்கள் ஆரோக்கியத்தை அதிகரிப்பதோடு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் பருமன் மற்றும் இருதய நோய் போன்ற நாட்பட்ட நிலைமைகளையும் மேம்படுத்த வேண்டும். மேலும் உங்கள் குடும்ப நோய்கள் மற்றும் உங்கள் சொந்த ஆபத்தான காரணிகளுக்கேற்பவும் உங்கள் கர்ப்பத்தைத் திட்டமிடுங்கள். கர்ப்பமாகிவிட்டால், மகப்பேறுக்கு முற்பட்ட கவனிப்பைத் தொடங்குங்கள். மருத்துவருடனான ஆலோசனைகளைத் தவிர்க்காது தொடர்ந்து பேணிக் கொள்வது சிறந்தது.

பிரசவத்திற்குப் பிறகு, மருத்துவமனையில் இருந்து வந்ததும் முதல் இரண்டு முதல் மூன்று வாரங்களுக்குள், உங்கள் மகப்பேறு நிபுணரிடம் மீண்டும் பரிசோதனையுடன் கூடிய ஆலோசனை பெறுவது சிறந்தது. கர்ப்ப காலத்தில் சிரமம் இருந்தாலோ, அல்லது உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு அல்லது உடல் பருமன் போன்ற உடல்நலக் குறைபாடுகள் இருந்தாலோ, வைத்தியரிடம் முந்தைய மருத்துவ நிலைமைகள், ஆலோசனைகள் மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு போன்றவற்றிற்காக ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

கர்ப்பிணிக்கும், பாலூட்டும் தாய்க்கும் எப்போதும் குழந்தையைப் பாதிக்காத மருந்துகளையே கொடுக்க வேண்டும். பெண்களை வலியோடு போராட விடாதீர்கள். அவர்களுக்கான எல்லா தேவைகளிலும் பங்கெடுத்து

அவளுடைய சுகவாழ்வுக்காகவும் குழந்தையின் நல்வாழ்வுக்காகவும் கணவன்மார்கள் குடும்ப உறவினர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.



வெளிநாடுகளில் குழந்தைப் பேற்றுக்கு பிறகு, கட்டாயமாக அந்த கணவனும் மனைவியும் கவுன்சிலிங் பெற்றுக்கொள்ள வேண்டும். இருவரையும் பெற்றோர் என்ற பயணத்திற்கு அங்கே தயார்படுத்துகிறார்கள். இங்கும் அந்தப்பழக்கம் பரவலாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். குழந்தைப்பேறு பற்றி இருக்கும் அறியாமை விலக வேண்டும்.

நமது மூளையில் சில குறிப்பிட்ட ஹோர்மோன்-களை நம்மால் சுரக்க வைக்க முடியும். அதன் மூலம், நமது மனநலத்தை நம்மால் பாது காக்க முடியும். உடற்பயிற்சி செய்யும் போது செரோடோனின், என்டோர்பின் போன்ற ஹோர்மோன்கள் சுரந்து, நமது மூளையில் செயல்படுகின்றன. ஓட்டப்பயிற் சியில் ஈடுபடுவதும் சிறந்தது. இது போன்ற சிறு முயற்சிகள் செய்து, அழுத்தத்திலிருந்து மீள வேண்டும்.

*Postpartum depression* இலிருந்து மீண்டு வந்துவிட்டால் அந்தப் பயணத்திலி ருந்து ஒரு அதீதமான பலம் கிடைத்து விடும். மீண்டும் இந்த நோய் நெருங்கினால், அதனை எதிர்கொள்ளும் நம்பிக்கை உருவாகும். யார் இப்பாதையில் வீழாமல், தாக்குப்பிடித்துக் கடக்கிறார்களோ, அவர்களை விட இந்த உலகில் மனபலம் நிறைந்தவர் வேறு எவருமே இல்லை என்று கூறினால் அது மிகையாகாது.


நூல் வெளியீட்டு அனுசரணையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

Published by **Mutur JMI Pvt Ltd**
0771020030 | 0262238593
www.mutur-jmi.com | muturjmi@gmail.com
Bazar Mosque Road Mutur Trincomalee SriLanka

# காளான் உற்பத்தியில்



## மனைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு

**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்** - விவசாய போதனாசிரியர் (ஏறாவூர்)
சம்மாந்துறை, இலங்கை.

இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் போசணைக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யக்கூடிய குறைந்த செலவில் அதிக வருமானத்தை தரக்கூடியதும் மருத்துவ குணமிக்கதாகவும் இக்காளான் செய்கை காணப்படுகின்றது.

இலங்கையில் பிரதானமாக இரண்டு வகையான காளான்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகிறது. அதாவது சிப்பி/ஒயிஸ்டர் காளான் (வெண் நிறமானது), அந்தோனி சிப்பிக் காளான்/வைக்கோல் காளான் (கபில நிறமானது). இது பசிடியோமயிசிடிஸ் வகுப்பை சேர்ந்த பூஞ்சணம்/ பங்கசுவாகும்.

காளான் போசணை சத்து நிறைந்த உணவாக உள்ளதனால் இதிலிருந்து பல வகையான உணவுகள் தயாரிக்கப்பட்டு நுகரப்படுகின்றது. இதற்காக 11 அடி நீளமான 10 அடி அகலமான 8 அடி உயரமுடைய கொட்டில்கள் அமைக்கப்பட்டு அதனுள் இறாக்கைகள் அமைத்துக் காளான் செய்கை பண்ணப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கொட்டிலில் அடைகாக்கும் அறை, அறுவடை அறை என இரண்டு அறைகள் காணப்படும்.அடைகாக்கும் அறையில் 1500 பூஞ்சணம் வளர்வதற்காக வித்திடப்பட்ட ஊடக பைகளும் , அறுவடை அறையில் பூஞ்சண இழை படர்ந்து; அறுவடைக்குத் தயாரான 1500 ஊடக

பைகளையும் வைத்துப் பேணப்படு கின்றன. கொட்டிலினுள் செல்லும் போது தொற்றுகள் ஏற்படுவதை தவிர்க்க கை ,கால்களை கழுவும் வித மாக கொட்டிலின் வெளியே நீர்த் தொட்டி *(Food bath)* ஒன்று அமைக்கப் படுகின்றன.

**காளான் வளர்பிற்கு தேவையான மூலப் பொருட்கள் (240பைகளுக்கானது)**

| | |
|---|---|
| 1.மரத்தூள் | -100g |
| 2.அரிசித் தவிடு | -10g |
| 3.நீர்ச்சுண்ணாம்பு/ CaCO3 | -02Kg |
| 4.மக்னீசியம் சல்பேற்று | -200g |
| 5.சோயா/பயறு மா | -01g |

**பொதியாக்கலுக்கான பொருட்கள்:**

| | |
|---|---|
| 1.PVC குழாய் | -05 |
| 2.இறப்பர் பட்டி | -05 |
| 3.பொலிபுரப்பலின் பை (7" அகல 14" உயரம்) | -02.5g |
| 4. பஞ்சு ( 50g பக்கட்) | -05 |
| 5. காளான் வித்தி | -08 |

தொற்று நீக்கத்திற்காக ஊடகத்தை அவிப்பதற்கு வருடத்திற்கு 02 பீப்பா தேவையாகும். காளான் உற்பத்தி முறை யானது பல படிமுறைகளைக்கொண்டது.

**01. வளர்ப்பு ஊடகம் தயாரிப்பு**

மரத்துண்டுகள்/ மரமீதிகள் அற்ற உலர்ந்த மரத்தூளை எடுக்கவும். சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளே மிகவும் பொருத்தமானது. எனினும் சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளின் 70% உம், சற்று பெரிதாக வெட்டப் பட்ட மரத்தூளின் 30% உம் கொண்ட கலவையினை பயன்படுத்தலாம். வெள்ளை/ சிவப்பு அரிசித் தவிடு பயன்படுத்தலாம். எனினும் பயன்ப டுத்தப்படும் தவிட்டில் அரிசி மீதிகள் காணப் படக்கூடாது. முதலில் அரிசித் தவிடு, சுண்ணாம்பு, சோயா மாவினை கலந்து பெறப்பட்ட கலவையினை மரத்தூளுக்குள் இட்டு நன்றாக கலக் கவும். பின் ($MgSO_4$) மக்னீசியம் சல்பேற்றினை நீரில் கரைத்து பெறப் பட்ட கரைசலினை பூவாளி ஒன்றி னுள் இட்டு மேலதிக நீர் சேர்த்து மரத்தூள் கலவைக்கு இட்டு நன்கு கலக்கவும்.

தேவையான அளவு நீர் சேர்க்கப் பட்ட கையால் இறுக்கிப் பிடித்து விட்டு தளர்த்தும் போது 4-5 பகுதி களாக உடைந்து செல்லும்.

**02. வளர்ப்பு ஊடகம் தயாரித்தல்**

பொலிபுறப்பலீன் பையினுள் கையை விட்டு மறுபக்கத்திற்கு பையினை திருப்பவும்.தயாரித்த வளர்ப்பூடகத்தின் 01Kg இனை அதனுள் நிரப்பவும். PVC குழாயி னை பையின் நுனிப்பகுதியில் இட்டு ஏற்படும் துவாரத்தை பஞ்சு மூலம் நிரப்பவும். பின்னர் பஞ்சினால் மூடப்பட்ட துவாரத்தைக் கடதாசித் துண்டினால் மூடி இறுக்கமாக இறப்பர் பட்டியினால் கட்டிக் கொள்ளவும்.

**03. வளர்ப்பு ஊடகத்தை தொற்று நீக்குதல்**

தேவையான பொருட்கள் -

1.சிறிய துளை கொண்ட மூடி பொருத்தப் பட்ட கிறிஸ்/ டீசல் பரல்

2.மரத்தால்/இரும்பால் செய்யப் பட்ட 5 - 51/2 " உயரமான பரலினுள் வைக்கக் கூடிய தாங்கி

இடைவிட்டு அதாவது இடியப்ப தட்டினை இடியப்ப சட்டியினுள் வைப்பது போன்று ஊடக பைகளை யும் அடுக்கி வைத்து பரலினை இறுக மூடவும். மேற்படி முறையில் பரலினுள் அடுக்கப்பட்ட வளர்ப்பு ஊடகப் பைகள் சிறிய துளை

யிலிருந்து நீராவி வெளியேறத் தொடங்கியது முதல் 2-2.5 மணித்தியாலங்கள் வெப்பப்படுத்தி தொற்று நீக்கம் செய்யப்படும்.

**04. விதை/ வித்தி இடல்**

தேவையான பொருட்கள்:

1. ஆரோக்கியமான வித்திப்பை
2. மெழுகுதிரி
3. தொற்று நீக்கி
4. மேசை

காளான் விதைகளை / வித்திகளை பையினுள் இடுவதற்கு அறை ஒன்றினுள் உள்ள மேசை ஒன்றைப் பயன்படுத்தவும். ஆரோக்கியமான வித்திப்பை உள்ள நெல்மணிகளை தனித்தனியே வேறாக்கிக் கொள்ளவும். தொற்றுநீக்கி ஒன்றைப் பயன்படுத்தி அறையில் உள்ள மேசையை தொற்று நீக்கம் செய்யவும்.

1-1.5 சதுர அடியில் அமையும் வண்ணம் 04 மெழுகுதிரிகளை வைத்து பற்ற வைக்கவும். இளம் சூடான வெப்பத்தில் வளர்ப்புப் பைகளைத் திறந்து அதனுள் 25 - 30 விதைகளை இடவும். பின் பஞ்சு, 3" x 3" நீள அகலமான காகிதத்துண்டு, PVC குழாய் துண்டினை பயன்படுத்தி வளர்ப்புப்பையை மூடவும். ஒரு வித்திப்பை 50 - 55 வளர்ப்புப் பைகளுக்கு போதுமானது.

**05. பங்கசினை வளர்ப்பு பையினுள் வளர்த்தல் / பரவவிடல்.**

இதற்காக பயன்படுத்தப்படும் அறை 75 % இருட்டாகவும், 26 - 28°C வெப்பநிலையிலும் காணப்படல் வேண்டும். பங்கசு வளர்வதற்கு அமெரிக்கன் சிப்பி காளான் 25 - 30 நாட்களும், அபலோனி சிப்பக்காளான் 40 - 45 நாட்களும் எடுக்கும்.

வளர்ச்சி காலத்தில் வளர்ப்புப் பைகளை அடிக்கடி அவதானித்து பாதிக்கப்பட்ட / பழுதடைந்த பைகளை உடனடியாக அழித்து விடவும்.



**06. காளான் உருவாவதற்கான உற்பத்திக் கூடாரத்தை அமைத்தல்**

காளான் உருவாவதற்குத் தேவையான காரணிகள்

1. வெப்பநிலை
2. சாரீரப்பதன்
3. ஒளி/ வெளிச்சம்
4. சிறந்த காற்றோட்டம்

அவிக்கப்பட்டு/ தொற்று நீக்கப்பட்ட பைகளை ஆறவிட்டு வித்தி இடப்பட்ட வளர்ப்பு ஊடகத்தில் பூஞ்சண இழைகள் நன்றாக வளர்ச்சி அடைந்த பின் இப்பைகளின் முகப்பு வெட்டி அகற்றப்பட்டதும் அறுவடை அறையின் இறாக்கைகளில் கிடையாக அடுக்கி வைக்கப்பட்டு குளிர்ச்சியான சூழலில் பேணப்படும்.

**07. அறுவடை**

முகப்பு வெட்டியதிலிருந்து ஒரு வாரத்தில் / 7 - 10 நாட்களில் சிறிய மொட்டுகள் வர ஆரம்பிக்கும். மொட்டுகள் வர ஆரம்பித்து 03 நாட்களில் அறுவடையைத் தொடங்கலாம். அறுவடை செய்தபின் வளர்ப்புப் பையின் வாயிலை சுத்தம் செய்து நீர் தெளித்து

விடவும். மீண்டும் 07 - 10 நாட்கள் இடைவெளியில் தொடர்ச்சியாக அறுவடையைப் பெறலாம். இவ்வாறு தொடர்ச்சியாக 03 - 04 1/2 மாதங்கள் அறுவடை செய்யலாம். சராசரியாக ஒரு பொதியில் இருந்து ஒரு கிலோ கிராம் வரை பெறலாம். மேலும் முதல் 02 மாதங்களுக்கு அறுவடை பெறப் படும் அளவு படிப்படியாக அதிகரித்து அதன் பின் படிப்படியாகக்குறையத் தொடங்கும்.



இக்காளான் செய்கை குறைந்த மூலதனம், நேரம், தொழிநுட்ப அறிவு என்பனவற்றைக் கொண்டு சுயதொழிலாக பெண்களால் மேற்கொள்ளக் கூடிய ஒரு தொழிலாக உள்ளமையால் மனைப் பொருளாதாரத்தில் ஒன்றரை மாத காலத்திலேயே வருமானம் பெறக்கூடிய ஒரு தொழிலாக உள்ளதுடன் பெண்களின் பங்களிப்புடனான ஒரு விவசாய செய்கையும் ஆகும்.

# ரமழானும் பாலஸ்தீனிய மக்களும்

- ரஜா முஹம்மத்

அடக்க முடியாத ஆக்ரோஷம் ஒன்று இருக்கின்றது. இருக்க வேண்டும் ஒவ்வொரு முஸ்லிமையும் தாண்டி ஒவ்வொரு மனிதர்களிடமும். நியூயோர்க் மக்களாகிய நாங்களும் குறைந்தவர்கள் அல்ல என்று நிரூபித்து விட்டார்கள், அவர்களின் சின்னத்தை மிதித்து சின்னாபின்னமாக்குவதன் மூலம். இந்த யுத்தம் எதற்கு நடக்கின்றது, ஏன் நாம் ஓடியொழிகிறோம் என்றெல்லாம் எதுவும் அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறார்கள் இருக்கும் புனித பூமியில் நடக்கும் அக்கிரமங்களை கண்டு ஆக்ரோஷம் எழ வேண்டும் தன்னாலே. அந்த சிறார்கள் மட்டுமல்லாது, பல அப்பாவி ஜனங்கள் அதட்டலுக்கு உட்படுத்தப்பட்டு ஷஹீதாக்கப்படுவதை கண்டு ஆக்ரோஷம் எழ வேண்டும் கண் சிவந்து கொண்டே.




உலக நாடுகள் விரட்டிய போது, பாலஸ்தீனமக்கள் இடம் கொடுத்தனர். அகதிகளாக வந்தவர்களை விருந்தினர்களாக கவனித்த ஒரே காரணத்திற்காக அந்த பூமியையே சூறையாடிய கல் நெஞ்சக்காரர்களின் நடமாட்டம் அந்த புனித பூமியில் இருப்பதைக் கண்டு ஆக்ரோஷம் எழ வேண்டும். இருந்த போதிலும், இஸ்ரேலியன் என்ற நாமத்தோடு பல கயவர்கள் இருந்தாலும், இரக்கமான உள்ளங்கள் அங்குமிருக்கின்றன என்பதை ஏற்கிறோம். என்றாலும், இந்த ரமழானை எம் பாலஸ்தீனியர்கள் உள அமைதியோடு வரவேற்குமளவு அவர்களுக்குரிய சந்தர்ப்பத்தை அல்லாஹ் அமைத்து அருள அனுதினமும் அவனை அழைப்போம்.



# ஊடக மயக்கம்

கலாநிதி ஏ.எல். அன்ஸார் - ஒலி/ஒளிபரப்பாளர்

ஒரு ஜனநாயக நாட்டில் நிதி நிர்வாகம், சட்ட வாக்கத்துறை பாராளுமன்றம் என்கிற மூன்று தூண்களுக்கும் நிகராக ஒரு நாட்டை தாங்கி நிற்கும் பெரும் சக்தியாகவும் நான்காவது தூணாகவும் ஊடகத்துறை விளங்குகிறது.

ஒரு எழுத்தாளன் அல்லது கவிஞன் ஊடகவியலாளன் அல்லது பல்துறை சம்பந்தமான விடயங்களில் மொழியோடு பயணிக்கும் ஒவ்வொருவரும் இன்றைய நவீன யுகத்தில் பலவற்றைக்கற்றிருக்கவேண்டும் அதிலும் இந்த ஊடகத்தைக் கற்றிருக்க வேண்டும் அது மனித வாழ்வை நகர்த்திச் செல்லவும் இலகுவாகவும் அமையலாம்.

முடியுமானவரை அனைவரும் தேடலுடன் ஊடக ஒழுக்கத்துடன் ஊடகத்தை பயன்படுத்த வேண்டும் மட்டுமன்றி நாம் எழுதுகிற போதும் பேசுகிற போதும் அதில் ஒழுக்கம் இருப்பது சாலச் சிறந்ததாகும்.

ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்கிற கருத்திற்கமைய எவனிடம் ஒழுக்கம் இல்லையோ அவனிடம் ஒழுக்கமான தரமான படைப்புக்களைக் காணவும் முடியாது. வானொலி தொலைக்காட்சி பத்திரிகை என முன்மாதிரியான பல ஊடகங்கள் இருந்தாலும் நம்மில் பலர் கையாளும் வட்சப், யூ ரியூப், முகநூல் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ஒரு கவிதை படைத்தாலும் கதை ஒன்றை பகிர்வதென்றாலும் சரி ஒரு கருத்தை சொல்வதென்றாலும் சரிஇங்கும் ஊடக ஒழுக்கம் அவசியமாகிறது.

தனி நபர் தாக்குதல், விரோதப்போக்கு விமர்சனங்கள் அதில் இருக்கக்கூடாது. முழு நாட்டின் ஆட்சியையும் மாற்றுகிற சக்தி இந்த ஊடகத்துக்கே உள்ளது. இந்த ஊடகத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரின் கைகளில்தான் உள்ளது கடந்தகாலங்களில் இந்த ஊடகத்தை முறையாகப் பேணத் தவறியதனால் இனங்களிடையே வன்முறை அதிகம் வெடிப்பதற்கும்.

இந்த சமூக ஊடகம் பிரதான பங்கு வகித்ததையும் குறிப்பிட்டுச் சொல்லியே ஆக வேண்டும் பொதுவாக ஊடகங்களினூடாக சமூகத்தில் எவ்வாறான கருத்தை விதைத்தால் எவ்வகையான தாக்கத்தை அது ஏற்படுத்தும் சமூகத்துக்கு அது பயன் உள்ளதா என யோசித்தே நாம் ஊடகங்களில் செய்திகளை பொறுப்புக் கூறும் தன்மையுடன் கையாள வேண்டும் எது எப்படியோ எமது நாட்டில் ஊடக சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக நினைத்தபடி எல்லாவற்றையும் செய்தியாக வெளியில் கொண்டு வர முடியாது.

ஊடகம் என்பதனை கருத்தியல் ரீதியான முறையில் நோக்குவதை விடவும் அனுபவரீதியாக நோக்கும் பண்பு எல்லோருக்கும் இருக்க வேண்டும் இப்படி நோக்கும் போது செய்தியில் மட்டுமல்ல இலக்கியத்தில் கூட ஊடக தர்மத்தை காணலாம்.

இன்றைய காலகட்டத்தில் தம்மை மக்கள் மத்தியில் பரபலப்படுத்தும் ஒரு துறையாகவே இன்றைய இளசுகள் ஊடகத்தைப் பார்ப்பதால் அதிகமானோர் ஏதாவதொரு ஊடகப் பிரிவை நேசிப்பதுடன் அதில் இணைந்து நாமும் ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளராக அல்லது தயாரிப்பா ளராக ஊடகவியலாளராக வரவேண்டும் புகழ் பெறவேண்டும் என நினைத்து அதுற்கான முயற்ச்சிகளில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகிறதே தவிர இந்த ஊடகத்தை முறையாகக்கற்று சாதிக்க வேண்டும்.




ஊடகத்தின் பால் கல்வி அறிவை பெருக்க வேண்டும் என பலர் நினைப்பதில்லை அரச கல்வித் திட்டத்தில் ஊடகமும் ஒரு பாடமாக இருக்கிறது பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இந்தத் துறையில் கலாநிதி என இன்னும் உயர்வான இடத்தையும் அடைய முடியும் என பலருக்குத் தெரியாது.

தரம் நான்கு தரம் ஒன்பது மாணவர்கள் மத்தியில் ஊடகத்தையும் அறிமுகம் செய்துள்ள அரசாங்கம் O/L, A/L லில் ஒரு முக்கிய பாடமாக கற்று கல்வியற் கல்லூரி பல்கலைக்கழகம் வரை செல்லலாம் ஆசிரியர்களை விரிவுரையாளர் களை உருவாக்கும் நோக்கத்தை அரசு கொண்டுள்ளது ஊடகத்தை கற்பவர் கள் ஊடகவியலாளராக மட்டுமன்றி உயர் பதவிகளில் இளம் சமூகம் அமர இத்துறையில் மூத்தவர்களும் வழிகாட்ட வேண்டும்.

அரசாங்கத்துக்கும் இதனை தெரியப்படுத்த வேண்டும் நமது பாராளுமன்ற

உறுப்பினர்கள் மூலம் அரசுக்கு அலுத்தம் கொடுக்க ஊடக சங்கங்களும் முயல வேண்டும் இந்த ஊடகத் தொழிலை விரும்புகிறவர்கள் செய்தி வாசிப்பு நேர்காணல் மேடை அறிவிப்பு வர்னனை தயாரிப்பு போன்றவை கள்தான் ஒரு ஒலி/ஒளி பரப்பாளனுக்கு தேவை என்கிற நிலைமையில் மட்டும் இருந்து விடாமல் தேடல் மிக்க எழுத்தாளனாய் நல்ல கலைஞனாய் நல்ல படைப்பாளியாய் சமூகம் விரும்பும் ஊடக வாதியாய் துறையை நன்கு கற்றவனாய் மனிதத்துவத்துடன் ஊடகத்தை பயன்படுத்தத் தொடங்கினால் நியாயமும் நின்று நிலைக்கும் அப்போது சமூகத்திலும் மாற்றம் வரும். அந்த மாற்றத்தை நாம் ஒவ்வொருவரும் நம்மில் இருந்தே தொடங்குவோம்.

எச்சந்தர்பத்திலும் பொய் கூறாதீர்கள் அது உங்கள் ஊடக வழ்வை பாதிக்கும். எந்த சவால்களையும் எதிர்கொள்ளதயாராக இருங்கள் அது உங்களை உயர்த்தி விடும்...

**லக்ஸ்டோ மீடியாவின் *27* வது வருட நிறைவை முன்னிட்டு லக்ஸ்டோ பிரதானி கலாநிதி ஏ.எல். அன்ஸாரின் தலைமையில் *2024* பெப்ரவரி 3ல் சாய்ந்தமருதில் இடம்பெற்ற திறமைக்கான தேடல் விருது விழா**














# கஷ்டத்திலும் கனவை நோக்கிப் பயணிக்கும் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் எம்.ரசீம்




**உங்களைப்பற்றிய ஓர் அறிமுகத்தை தரமுடியுமா?**

நான் **அப்துல் லத்தீப் மொஹமட் ரசீம்.** திருகோணமலையில் மூதூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்டவன். தற்பொழுது Muslim aid Srilanka என்ற NGO ஒன்றில் Video Production Officer ஆக வேலை செய்து வருகிறேன் அத்துடன் Freelance புகைப்படக் கலைஞனாக வேலை செய்து வருகிறேன்.

**புகைப்பட துறையில் நீங்கள் உள்வாங்கப்படுவதற்கான காரணம் என்ன?**

இயற்கை மற்றும் வனவாழ் விலங்குகள் குறித்து எனக்கு சிறுவயதிலிருந்தே ஆர்வம் இருந்துவந்தது. 2013 ஆண்டு நான் A/L எழுதிவிட்டு வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் எனது கைத்தொலைபேசியினை பயன்படுத்தி பல புகைப்படங்களை எடுத்து எனது முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன். எனது ஊரில் இருக்கின்ற குருவிகள், சிறிய மிருகங்கள், இயற்கைக் காட்சிகள் என்பவற்றையே அதிகம் படம் பிடித்து பதிவேற்றி வந்தேன். அப்படி ஒரு நாள் நான் பதிவேற்றிய குளத்தில் நின்றபடி இருந்த ஒரு குருவியின் புகைப்படம் முக நூலில் வைரலாகியதோடு விடிவெள்ளி பத்திரிக்கை ஒன்றிலும் பிரசுரமாகியிருந்தது. அதைப்பார்த்ததும் எனக்குள் இருந்த புகைப்படத் துறை சார்ந்த ஆசை அதிகரித்து மேலும் பல வித்தியாசமான புகைப்படங்களை எடுக்க வேண்டும் என்ற அவா என்னில் எழுந்தது. பின்னர் கேமரா ஒன்றை வாங்கி அதனூடாக புகைப்படங்களை எடுத்து முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன்.

**இந்த துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் பற்றி சொல்ல முடியுமா?**

ஆரம்ப காலங்களில் நான் போட்டோக்கள் எடுக்க ஆரம்பித்தபோது எனது பிரதேசத் தில் இருக்கும் பலர் என்னை ஒரு வகையாகவே பார்த்தார்கள். கிண்டல் அடிக்கவும் செய்தார்கள். குறிப்பாக நான் wild life Photography இல் ஈடுபடும்போது என்னை

ஏளனமாக பார்த்தார்கள். தொடர்ச்சியாக காட்டுக்குள் இருப்பதாகவும், காட்டில் வாழ்ந்துவருதாகவும் பல வகையிலும் பேசினார்கள். ஆனால் இன்று அந்த கதைகள் மறைந்துபோய் அவர்களே என்னைப் பாராட்டு கின்றார்கள். அதேபோல நான் எதிர் நோக்கிய முக்கிய சவால்களில் ஒன்று தான் பொருளாதார பிரச்சினை. ஆரம்ப காலங்களில் என்னிடம் சரியானதொரு கேமரா இருக்கவில்லை. மூன்று வருடங்கள் நான் உழைத்து சேமித்த சேமிப்பிலிருந்து தான் *wild life photography* இற்கு பொருத்தமான கேமராவினை வாங்கினேன்.

போக்குவரத்து சிரமம், அதற்கான செலவுகள் என்பன எனக்கு பெரிதும் சவாலாக இருந்தது. எனது உழைப்பில் நான்கில் மூன்று பங்கை இவற்றுக்காக செலவளித்தேன். அதே போல மொழிப்பிரச்சினையும் எனக்கு இருந்தது. சிங்கள பிரதேசங்களில் புகைப்படம் எடுக்கச் செல்லும்போது மொழி தெரியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றேன். தற்பொழுது மொழியினையும் சற்று கற்றிருக்கின்றேன். அதே நேரம் இந்த வனவிலங்கு புகைப்படத் துறையில் ஒரு இடத்தை வகிப்பது மிகவும் கடினமானதொன்றாகும்.

**எப்படியான போட்டோக்களை எடுப்பதில் நீங்கள் அதிக ஆர்வம் செலுத்துகின்றீர்கள்?**

வித்தியாசமான மிருகங்கள், வித்தியாசமான பறவைகளைத் தேடி போட்டோ எடுப்பதில் தான் நான் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகிறேன். அதிலும் குறிப்பாக பறவைகள், அவற்றின் செயற்பாடுகளை அவதானித்து போட்டோக்களை எடுப்பதில் நான் அதிகம் கவனம் செலுத்துகிறேன். இலங்கைக்கு ஒரு பருவத்திற்கு மட்டும் இந்தியாவிலிருந்து வருகை தரும் "பிளமிங் கோஸ்" எனப்படும் ஒரு பறவையை பற்றி கேள்விப்பட்டேன். அது ஜனவரி தொடக்கம் மார்ச் வரையிலான காலப் பகுதியில் மாத்திரமே இலங்கையில் இருக்கும். இவ்வருடம் குறித்த பறவை இலங்கை வருகை தந்திருந்த நேரம் மன்னார் பகுதிக்கு சென்று அவற்றை புகைப்படம் எடுத்தேன். பறவைகள் மீதான எனக்குள்ள காதலை அப்புகைப் படங்கள் உணர்த்தும். அது போல இலங்கைக்கு உரித்தான சிறுத்தை இனம், இலங்கை யானைகள் பாதுகாப்பு சார்பாகவும் கவனம் செலுத்தி வருகின்றேன்.



***Wildlife Photography* இல் ஏதேனும் மறக்க முடியாத அனுபவங்கள், சம்பவங்கள் உண்டா?**

ஒரு முறை யானைகளை படம் பிடிப்பதற்காக காட்டுக்குள் சென்ற வேளை என்னையும் எனது நண்பர் ஒருவரையும் யானை துரத்தியது மறக்க முடியாத ஒரு சம்பவம். யானையை நேருக்கு நேராக நின்று படம் எடுத்துக்கொண்டிருக்கையில் கோபமடைந்த யானை எங்களை துரத்த ஆரம்பித்துவிட்டது. கடுமையான பயத்துடன் அன்று தப்பி வந்தோம்.

அதேபோல 2023 ஆம் ஆண்டு மன்னார் பிரதேசத்தில் "பிளமிங் கோஸ்" பறவையினை படமெடுக்க சென்ற சந்தர்ப்பத்தில்,





குறித்த தினத்தன்று காலை 6 மணிமுதல் 8 மணிவரை குளத்திற்குள் நெஞ்சுப்பகுதிவரை நீர் மட்டம் நிரம்பியிருக்க எந்தவொரு அசைவுமில்லாமல் நின்று குறித்த பறவையினை புகைப்படம் எடுத்து விட்டு வரும்போது என்னைக்கண்ட அந்த ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் ஆச்சரியத்திற்கு காரணம் என்ன என்று அவர்களை கேட்டபோது அவர்கள் சொன்ன பதிலில் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன்! அவர்கள் சொன்ன பதில் மனிதர்களை வேட்டையாடும் முதலைகள் அக்குளத்தில் இருப்பதாகவும் இதற்கு முதல் பலரை வேட்டையாடி இருப்பதாகவும் கூறினார்கள். இந்த குளத்திலா இரண்டு மணித்தியாலங்கள் இறங்கி நின்றேன் என எண்ணிய போது குலைநடுங்கிப்போனது.

**இந்த துறையில் உங்கள் வருமானம் எப்படி? திருப்திகரமான வருமானம் கிடைக்கின்றதா?**

*Wildlife Photography* யினை பொறுத்த வரையில் வெளிநாடுகளில் அதிக வருமானங்களை ஈட்டக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அது இலங்கையை பொறுத்த வரையில் எந்தளவு சாத்தியமானது என்று எனக்கு தெரியவில்லை. எனது போட்டோக்களையும் நான் விற்க முயற்சிகள் பல எடுத்துள்ளேன். ஆனால் அவற்றுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஒரு போட்டியில் எனது *wildlife* போட்டோ ஒன்று தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக பணப்பரிசு கிடைக்கப்பெற்றது. அவ்வளவுதான். வருமானத்திற்கு அப்பால் இந்த *Wildlife Photography* இல் எனக்கு கிடைக்கும் திருப்தியானது அளப்பெரியது. புதிய விலங்குகளை காணக் கிடைப்பது, அவற்றின் செயற்பாடுகளை அவதானிக்க முடிவது, காடுகளுக்குள் பயணிப்பது போன்றன எனது மனதுக்கு புதுவகையான திருப்தியினைத் தருகின்றது.







**இந்த துறையில் நீங்கள் ஏதேனும் சாதித்துள்ளீர்களா? உங்களுக்கான ஏதேனும் அங்கீகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளனவா?**

*National Geographic India* என்னுடைய ஒரு புகைப்படம் தெரிவுசெய்யப்பட்டது 2023, *AWPC (Asian Wildlife Photographer Club)* அதன் மூலம் எனக்கு இந்த ஆண்டுக்கான *wildlife Photography Influencer Awards 2023*, இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஒரு போட்டியில் எனது புகைப்படம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது 2022. அதேபோல தனியார் அமைப்புகளால் நடத்தப்படுகின்ற புகைப்பட போட்டிகளில் தேசிய மட்டத்தில் 2022, பிராந்திய மட்டத்தில் என 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட இரண்டு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அத்தோடு தனியார் நிறுவனங்களில் பல கலண்டர்

அச்சிடுவதற்காக புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டது. பல ரூபாய் பணப் பரிசில்கள் கிடைத்துள்ளது அதேபோல TikTok, Facebook, Instagram போன்ற சமூக ஊடகங்களில் எனது புகைப்படங்களைப் பார்ப்பதற்கென்றே அதிகளவானோர் என்னைப் பின் தொடர்கின்றார்கள்.

**உங்களது எதிர்கால நோக்கம் என்ன?**

சர்வதேச ரீதியில் நடைபெறுகின்ற *Wildlife Photography* போட்டிகளில் எனது புகைப்படங்களும் தெரிவு செய்யப்பட்டு எனது பெயர் சர்வதேச ரீதியில் ஒரு *Wildlife Photographer of the Year* ஆக மிளிரப்படவேண்டும் என்பதே எனது பிரதான நோக்கம்.



அத்துடன் *Masai Maara* செல்ல வேண்டும் (வனவிலங்கு புகைப்படம் எடுக்க,) பாடசாலை மாணவர்களுக்கு புகைப்பட கண்காட்சி மற்றும் புகைப்பட பயிற்சிப் பட்டறை வைக்க வேண்டும் , அதேபோல எனக்கு *photography* தொடர்பில் தெரிந்த விடயங்களை இத்துறையில் ஆர்வம்கொண்டுள்ள பலருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதும் எனது ஆசை. தற்போது என்னுடைய *TikTok* பக்கம் பலருக்கு இது தொடர்பான அறிவினை வழங்கி வருகிறேன்.

**இறுதியாக வளர்ந்து வரும் *Wildlife Photographer*களுக்கு நீங்கள் கூறுவது என்ன?**

*Wildlife Photography* யினை பொறுத்தவரையில் எமக்கு நிறைய அனுபவங்கள் இருக்க வேண்டும். ஆகவே தாம் வசிக்கும் சூழலில் இருந்துகொண்டே எமது கண்களுக்குப்படுபவற்றை, உதாரணமாக சொல்வ தென்றால் வீட்டுத்தோட்டத்திற்கு வருகை தரும் அணில்கள், சிறு குருவிகள் போன்றவற்றை ஆரம்பத்தில் போட்டோ எடுத்து தமது திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். அதுவே *Wildlife Photography* யின் ஆரம்பம். இலங்கையினை பொறுத்த வரையில் *Wildlife Photography* துறைக்குள் பிரவேசிப்ப தென்றால் சற்று செலவுகள் ஏற்படும் அதற்கான ஆயத்தங்களையும் செய்து கொள்ளுங்கள். முக்கியமான விடயம் என்னவென்றால் *Wild Life Photography* இல் புகைப்படம் எடுப்பது மட்டும் எமது நோக்கமாக இல்லாமல் இயற்கையின் சமநிலையினை பேணுவதிலும் நாம் அக்கறையுடன் செயல்படவேண்டும். இத்துறை தொடர்பான அறிவுரைகள், புதிய கேமாரக்களை கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் மற்றும் *Photography* சம்மந்தமான *Tips & Tricks* களை எனது சமூக ஊடக வலைத்தள பக்கங்களில் பகிர்ந்தும் வருகின்றேன். ஆர்வம் உள்ளவர்கள் அவற்றின் ஊடாக என்னைத் தொடர்பு கொண்டு உங்களுக்கான இலவச அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- ***Facebook page: www.facebook.com/raseemphotography***
- ***Instagram ID: @Raseem_Photography***
- ***TikTok ID: @raseemphotography***
- ***Youtube : Raseem photography***
- ***Contact : +94 75 768 0204***

நேர்காணல்

**இஹ்ஷான் ஜே.எம்.ஐ**

கவிதை

# பெண்மை இனிதடா மானுடா

அர்சிதா அமீர்

பெறும் சுமையில் சுகம் தேடி
பேரின்பம் என நாடி;
பெற்றெடுத்தவள் பெண்மையே

ஆயிரம் உறவென்று ஆசை காட்டி;
அடுப்பங்கரையில் அவளின்
ஆயுளை நீட்டி;
அடக்கிவைக்கும் உயிரும்
பெண்மையே

குற்றங்கள் கண்ட போதும்;
நெற்றிக்கண் மாண்ட போதும்;
நெஞ்சிலே சுமப்பது பெண்மையே

சொல்லா ஆசை சொக்க
வைத்திட;
சொல்லில் கூட சொல்லமுடியா
சோகம் பெண்மையே

இல்லத்து ராணி என்றாலும்;
இருப்பவர் உள்ளத்தை
புரிந்தது பெண்மையே

உன்னை மீட்டு; மண்ணை காக்க;
மாண்டதும் பெண்மையே

பருவங்கள் மாறி; பண்புகள் கோடி;
பார்வையில் வீசி;
வதம் செய்வதும் பெண்மையே

தரணியை தாங்கிட;
தலையை கோதிட;
உன் உயிர் நாடி சேர்ந்திட;
பெண்மை இனிதடா மனிடா

# வெற்றி

வெறுமையிலும் தளராது
வென்று நிற்க போராடு...

உன் முயற்சிகள் தோல்வியை
கண்டாலும்
நீ சோர்ந்து விடாதே....

உன் கனவுகளை நிஜமாக மாற்று....
உன் ஆசைகளை
எட்டிப் பிடித்துக் கொள்....

கால் தடுக்கி விழும் போதெல்லாம்
கை தூக்கி விட யாருமில்லை என
கனவிலும் நினைக்காதே....
உன்னில் பதுங்கி இருக்கும்
உன் தன்னம்பிக்கை போதுமடா....

வையகம் தூற்றினாலும்
விரண்டோடாது
விண்ணையும்
தொட்டு விடு தோழா....

அடிச் சறுக்கலே
அடியெடுத்து வைக்க
ஆணித்தரமாய்
வெற்றி வாகை சூடலாம்.

ஹப்ஸா பஹ்மீர்
இறம்புக்கனை



# சினிமா இலக்கியத்தில்
## மேலைத்தேயமும் கீழைத்தேயமும்

தெற்காசிய சினிமாவில் இந்திய சினிமாக்களின் வகிபாத்திரம் சமுதாய பங்குபற்றுதலில் மிக முக்கியமான ஒரு இடத்தை பிடிக்கின்றது. அந்தவகையில் தென்னிந்திய சினிமாக்கள் இலங்கை யில் உண்டாக்கும் அதிர்வலைகள் தேசிய மற்றும் உள்ளூர் பேசு பொருள்களாக மாறிவருகின்றன.

திரைப்படங்களைப் பொறுத்தமட்டில் தமிழ் சினிமா திரைப் படங்கள் அதிக அளவு இலங்கையில் வரவேற்புப் பெற்றுள்ளன. இதற்குப் பிரதான காரணமாக இலங்கையின் தேசிய மொழிகளில் தமிழ் மற்றும் சிங்களம் அமைந்துள்ள போதும் சிங்கள சினிமாக்கள் நாடளாவிய ரீதியிலான இலங்கை மக்களுக்குப் பாரியதொரு சமூக மாற்றத்திற்கு வித்திடவில்லை. அத்தோடு பெரும்பான்மை சமூகத்தை மட்டும் திருப்திப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

இந்தப் பின்னணியோடு அவதானிக்குமிடத்து தமிழ் சினிமாக்கள் இலங்கையில் அதிகளவு வரவேற்பை பெற்றுள்ளமையை நோக்க முடிகின்றது. அவ்வப்போது தென்னிந்திய சினிமாக்களில் பேசு பொருளாக மாறுகின்ற கதைகள் சமூக வலைத்தளங்களில் விவாதத்துக்கு உட்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதனூடாக திரைப்படத்தின் இலவச விளம்பரப்படுத்தல் பிரதான செல்வாக்கு செலுத்துகின்ற போதும் ஒரு திரைப்படம் சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் அதிர்வலைகள் எல்லாத் துறைகளிலும் அலசி ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

இருந்தபோதும் கலை இலக்கிய வடிவத்தின் நவீன பரிணாம வடிவங்கள் குறித்து நோக்கும்போது அசையும் படங்கள் அதாவது குறுந்திரைப் படங்கள், சின்னத்திரை, வெள்ளித்திரை போன்றவை களை உள்ளடக்க முடியும். சினிமாக்கள் குறித்தான தனிமனித நேர் மறை விமர்சனங்கள் எப்போதும் ஒரு தளத்தில் மட்டுமே குறிவைக் கப்படுகின்றது. குறிப்பாக இலக்கிய வடிவமாக அரசியல் வடிவமாக மற்றும் சமூகத்தில் பெண்கள் சார் நிலையிலான பின்னணியைக் கொண்டே ஒப்பிடப்படுகிறது.

உண்மையில் சினிமாக்கள் ஒரு சமூகத்திற்கு முன்வைக்கின்ற பல நடைமுறை சார் தெளிவூட்டல் தருகின்றபோதும் உலகளாவிய ரீதியாக காணப்படுகின்ற முதலாளித்துவக் கொள்கையும் அதனூ டான சமூக மட்டத்தில் காணப்படுகின்ற பன்மைத்துவ வேறுபாடுமே பிரதான பேசுபொருளாக எப்போதும் அவதானிக்க முடிகின்றது.

கலை இலக்கியப் பண்பாட்டியல் அம்சங்களை கடந்த மனித வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களும் தனிமனித வேறுபாடுகள் பிரதான பேசு பொருளாக இருக்க வேண்டும். ஏனெனில் சமூக மட்டத்தில் ஒவ்வொரு தனி மனிதனுடைய இயங்குநிலை தளம் போராட்டம் வாழ்வியல் முயற்சியும், பயிற்சியும் உண்மையில் பல் வகைமை கொண்டது. இதை ஒரு திரைப்படத்தின் ஊடாக ஒட்டு மொத்த தனிமனிதனுக்கும் ஒரு உந்துதல் அளிக்கும் ஆலோசனைக் குப்பைகளாகவும் மற்றும் வரட்டு சிந்தனையாகவும் தற்போது மறைந்து விட்டது.

மிக கிட்டிய நவீன தொடர்பாடலானது சமூக வலைத்தளங்களின் ஊடாக உருவான ஒரு கலாசாரமாகும். அண்மைய தென்னிந்திய சினிமாக்கள் பெரும்பாலும் நாட்டின் அரசியல் பொருளாதார மற்றும் சமூகவியல் சார்ந்து தனது கருத்துக்களை மக்களுக்குத் திணிப்பதாக தோன்றுகின்றது. ஏனெனில் இந்திய கலாசாரங்களைப் பொறுத்த மட்டில் நாம் காணும் செய்தி உலகில் ஒரு தெளிவான சமூகக் கட்டமைப்பையும் மானிடவியல் பண்பாட்டியல் கலாசாரங்களுக்கு முரணான மனித வரட்டுக்குணங்களையும் காட்டுவதாகவே அமைகின்றன. மேற்கத்திய சிந்தனை வாதத்துக்கும் கீழைத்தேய சிந்தனை வாதத்திற் கும் இடையிலான ஒரு பனிப்போர் இந்த சினிமாக்களின் ஊடாக வெளிக்காட்டப்படுகின்றது.

உண்மையை உண்மையாக வெளிகாட்டும் மேலைத்தேய சினிமாக்களில்


பண்பும், உண்மையைப் பொய்யாகவும், உண்மையை மறைத்து மாற்று சித்தரிப்போடு சித்திரிக்கும் மற்றும் திணிப்பு செய்யும் கீழைத்தேய சினிமாக்களின் பண்பும் வேறுபட்ட தளங்களில் விவாதத்திற்கு உற்படுத்தவேண்டிய காரணிகளாகும். இந்தப் பின்னணியோடுதான் இவற்றை குறித்தான உரையாடல்களை நாம் தொடங்கவேண்டும். ஒவ்வொரு சினிமா சார்ந்த தலைப்புகளும் இவ்வாறே குறித்த துறை மீதான ஆழ்ந்த அனுபவம்சார் பகிர்வுகள் மூலமாக நாம் முன்வைக்க எத்தனிக்கின்றோம். ஏனெனில் எல்லோரும் கருத்து சொல்கிறார்கள் என்ற பொதுவுடமைக் கருத்து சுதந்திரத்தை இங்கு உள்ள பலர் துஸ்பிரயோகம் செய்வதாகவே சமூக ஊடகங்கள் மற்றும் சினிமா இலக்கியங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன என்பதுவே உண்மை.

●●●

# இலங்கையின் புகையிரத பாதை

**இலங்கையின் புகையிரதப் பாதையின் மொத்த தூரம் *1500* கிலோமீட்டர்கள் ஆகும்.**

1) பிரதான புகையிரதப்பாதை
கொழும்பு கோட்டை முதல் பதுளை வரை *(290 கிமீ)*
2) கடலோர புகையிரதப்பாதை
கொழும்பு கோட்டை முதல் பெலியத்த வரை *(187 கிமீ)*
3) புத்தளம் புகையிரதப்பாதை
ராகம முதல் பெரியநாகவில்லு வரை *(133 கிமீ)*
4) களனிவெலி புகையிரத பாதை
மருதானை முதல் அவிசாவளை வரை *(58 கிமீ)*
5) மாத்தளை புகையிரதப் பாதை
பேராதனையிலிருந்து மாத்தளை வரை *(34 கி.மீ.)*
6) வடக்கு புகையிரதப்பாதை
பொல்கஹவெலயிலிருந்து காங்காசன்துறை *(339 கி.மீ.)*
7) மன்னார் புகையிரதப்பாதை
மதவாச்சி முதல் தலைமன்னார் வரை *(106 கி.மீ.)*
8) மிஹிந்தலை புகையிரதப் பாதை
மிஹிந்தலை சந்தியிலிருந்து மிஹிந்தலை வரை *(11 கிமீ)*
9) மட்டக்களப்பு புகையிரதப்பாதை
மஹவ முதல் மட்டக்களப்பு வரை *(212 கி.மீ.)*
10) திருகோணமலை புகையிரதப்பாதை
கல்லோயா முதல் திருகோணமலை வரை *(70 கி.மீ.)*





அறிவியல்

# பிறந்ததும் குழந்தை அழுவது ஏன்?

**என்.ஆஷா பாலின்**
உயிரியல் பட்டதாரி

குழந்தைப் பிறப்பு என்பது ஒரு புதிய உலகிற்கு வருகை தருவதற்கு ஒப்பானது. அவ்வாறாயின் பரிட்சயம் இல்லாதா ஒரு சூழலிற்கு புதிய விருந்தாளியின் நடைமுறை இயல்பு எவ்வாறு இருக்கும் என்பது நாம் உணர்வினால் அறிந்த விடயமே. அவ்வாறு குழந்தைப் பிறப்பை ஒப்புநோக்கினால் எமக்கு இலகுவாக விடை கிடைக்க வாய்ப்புண்டு.

பொதுவாகவே சுவாச சீராக்கத்தை புறச்சூழல் நிபந்தனைக்கு ஏற்ப மாற்றி ஒழுங்குபடுத்த குழந்தைக்கு அழுகை மூளை மாற்று நரம்புத் தொகுதியின் தன்னிச்சை செயற்பாடு காரணமாக தூண்டப்படும். வாயைத் திறந்து குரல்வளை ஊடாக சத்தத்தை எழுப்பி அழுவதால் குழந்தையின் சுவாச சீராக்கும் மறுசீரமைப்பு பெறுகிறது. இவற்றுக்கு மேலாக கீழ்வரும் சில காரணங்கள் அழுகையை மேலும் தூண்டுவதாக அமையும்.

*1.* ***ஒளி ஒலி மாற்றம் -***
கருவறை உள்ளே குழந்தையின் சூழல் இருள் நிலையிலேயே நிலவும். அத்துடன் குழந்தையானது தொடர்ந்து தாயின் சாந்தமான இதயத்துடிப்பு ஓசையை கேட்டு அதற்கு ஒன்றித்துப் போய் இருக்கும். அவ்வாறான சூழ் நிலை குழந்தைப் பிறப்பின் பின்னர் முற்றுமுழுதாக மாற்றமுறும்.

இதனால் அழும் குழந்தையை நெஞ்சோடு அரவணைக்கும் போது இதய ஓசை கேட்பதனால் குழந்தை அழுகையை ஓரளவு குறைக்கும். அத்துடன் புறச்சூழலில் இருந்து கிடைக்கப்பெறும் ஒலியை குழந்தை கேட்கும் போது இடியோசைக்கு ஒப்பானதாக பெரும் சத்தத்தையும் அதிர்வையும் உணரும்.

2. **அமுக்க மாற்றம் -**
குழந்தை பிறந்தவுடன் அகச்சூழலில் இருந்து வேறுபட்ட புறச்சூழல் அமுக்கம் குழந்தைக்கு ஒரு தாக்கத்தை உண்டாக்கும். அத்துடன் குழந்தை பிறந்ததும் சிறிய உடல் விரிவு ஒன்று நிகழும்.

3. **வெப்பநிலை மாற்றம்** -
கருப்பையில் இருந்த குழந்தை தாயின் உடல் வெப்பநிலைக்கு இசைவு பெற்று இருக்கும். ஆனால் பிறப்பின் பின்னர் வெப்பநிலை மாற்றம் நிகழும்.

4. **பசி மற்றும் பயம்** -
சூழல் மாற்றம் மற்றும் உணர்வுகளின் தூண்டலினால் பயம் மற்றும் பசி தூண்டப்படும்.

5. **பிறப்பு வழியினால் வலி** -
பிறப்பின் போது குழந்தை தாயின் யோனித்துவாரம் ஊடாகவே வெளி வரும். இதன்போது குழந்தையின் உடல் சற்று ஒடுக்கமான சிறிய பாதையூடாக பயணிக்கையில் உடலில் வலியேற்படும்.

***கட்டாயம் குழந்தை பிறந்ததும் அழவேண்டுமா?***
என்றால் கட்டாய நிபந்தனை ஏதும் இல்லை. சில குழந்தைகள் அழாமலும் பிறக்கத்தான் செய்கின்றன. இவ்வாறான குழந்தைகளில் பெரும்பாலானவை சற்று உடலியல் குறைபாட்டைக் கொண்டதாக அமையும் என்று ஆய்வு கள் கூறுகின்றன.

## நீருக்குள்மகப்பேறு

அண்மையில் ரஷ்ய விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் அவர்கள் உலகிற்கு குழந்தை பிரசவம் குறித்தான புதியதொரு எண்ணக் கருவை முன்வைத்தனர். நீருக்குள் குழந்தை பிறப்பதனால் குழந்தை மட்டுமன்றி தாயும் பல்வேறுவகை நன்மைகளை அடைகின்றனர். மேலும் இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடு களைக் கொண்டதாகவும் அமைகின்றது.

குழந்தையின் இயல்பு நிலை, சூழல் மற்றும் உடல் நிலை (வெப்பநிலை, அமுக்கம்) என்பன வெகுவாக பேணப்படுகின்றன. தாயின் உடல் வலி, குருதி அமுக்கம், உடலில் தசைகளின் தளர்வு மற்றும் மயக்கம் என்பன ஏற்படுவது இழிவளவாகின்றது.

நீருக்குள் மகப்பேறு நடைபெறு வதனால் ஏற்படும் பல்வேறு நன்மைகளைப் பற்றிய முன்னறி விப்பை இஸ்லாமிய வேதமான புனித அல்-குர்ஆன் இவ்வாறு பேசுகிறது.




**"மர்யம் அவருக்கு ஏற்பட்ட பிரசவ வேதனை அவரை ஒரு பேரீத்த மரத்தின்பால் கொண்டு வந்தது: இதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறக்கப்பட்டவளாகி இருக்கக் கூடாதா! என்று அரற்றினார். அப்போது ஜிப்ரீல் மர்யமே! நீங்கள் கவலைப்படாதீர்கள்! உமது இறைவன் நிச்சயமாக உமக்கு கீழாலேயே ஒரு நீர் ஊற்றை உண்டாக்கி இருக்கின்றான் என்று அவர் அழைத்து கூறினார்."**
***(அல்-குர்ஆன் 19:23~24)***

தெற்காசிய நாடுகளில் "நீருக்குள் மகப்பேறு" முறைமை பெரிய அளவில் நடைமுறைக்கு வரா விட்டாலும் மேலைத்தேய நாடு களில் பாரிய வரவேற்பை இந்த முறைமை காண்பிப்பதாக அறிக்கை கள் கூறுகின்றன.



# நீங்க எந்த வம்சாவளி?

பார்ஹான் முஸ்தபா – மூதூர்

*"நீங்கள் எந்த நாடு?" இப்படித்தான் நான் போன பல இடங்களில் எல்லாம் கேட்கிறான், ஒருத்தன் கூட ஸ்ரீலங்காவா என்று இதுவரை கேட்டதில்லை என்று என் நண்பன் ஒருத்தன் புலம்பினான்.*

*அவனுக்கென்னவோ நீங்க ஸ்ரீலங்காவா என்று யாராவது கேட்கனும் என்று ஒரு பற்று இருந்தது.*

*வெளிநாடுகளில் பங்களாதேஷ், நேபால், பாகிஸ்தான், எகிப்து, சூடான், சிரியா, ஜோர்தான் என இன்னும் பல வெளிநாட்டவர்கள் இருந்தாலும் அவர்களுக்கென்று தனி உடல் அடையாளம், கலாசார அடையாளம் என ஏதாவது ஒன்று அவரை எந்த நாட்டவர் என்று அடையாளப்படுத்தி விடும்.*

*ஆனால் இலங்கையர்களில் பலரை அடையாளம் காண்பது மிகமிக கடினம். அதற்கு காரணங்களும் இருக்கிறது முக்கியமாக அவர்களுக்கென்று பாரம்பரிய உடை அணிய மாட்டார்கள், பெரும்பாலானவர்கள் ஆடம்பரமாக வெஸ்டர்ன் டைப்பில் இருப்பார்கள், முக அமைப்புகள் போட்டோ கொப்பி எடுத்ததைப் போன்று ஒரே சாயலில் இருக்காது.*

*இலங்கையை ஆண்ட வெளிநாட்டவர்களும், இலங்கைக்கு வந்த பல வெளிநாட்டு வியாபாரிகளும் இலங்கையிலேயே திருமணம் முடித்து அவர்களது சந்ததிகளை பரப்பியதால் உண்டான குழப்பம்தான் இது. கரையோரத்தை ஆண்ட போர்த்துக் கேய, பறங்கிய வம்சாவளிகளும், ஒல்லாந்து, டச்சு வம்சாவளிகளும், ஆங்கிலேய வம்சாவளிகளும்*

*இன்னும் சீனா, இந்தோனேசியா, பாரசீகம், ஆங்காங்கே சில ஆபிரிக்க இனத்தவர்களும் உண்டு,அவர்களில் அந்தந்த வம்சாவளிக்குரிய பண்புகள் இன்னும் அவர்களிடம் இருக்கிறது.*

*பழைய பழமொழி சொல்லுவாங்க, பழைய வீடும், பறங்கி பொண்ணும் எடுக்கக் கூடாதாம், (ரெண்டுமே செலவை அதிகம் வைக்குமாம்). இது ஒரு பழமொழிதான். யார் மனதையும் புண்படுத்த அல்ல.*

*இதெல்லாம் சொல்லிட்டு கடைசியா அவனிடம் சொன்னேன், இதனால்தான் உன்னை எந்த பழத்தின் கொட்டை என்று அடையாளம் காண்பதில் அவனுக்கு கஷ்டமாக இருக்கிறது என்று, சொல்லிக் கொண்டிருக்கும்போது பக்கத்தில் இருந்த ஒரு இந்தியர் கேட்டார்........*

*"அப்ப எங்க நாட்டில் இருந்து யாரும் வரல்லியா" என்று. "என்னது, வர இல்லியாவா..... நீங்கதான்டா வந்து எங்களை குழப்பி சின்னா பின்னமாக்கின ஆக்கள்.....*

*"700 நண்பர்களுடன் ஒரு இளவரசன் இலங்கைக்கு வந்தானாம், அவன் இந்தியா வில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என நண்பர்களோடு சேர்ந்து அட்டகாசம் பண்ணியதால் அவனது அப்பாவான ராஜா அவனை ஒரு கப்பலில் ஏற்றி கடலில் தள்ளி விட்டானாம், அந்தக் கப்பல் வந்து எங்க நாட்டில் தரை தட்டி அப்படியே வம்சங்கள் பெருகிட்டாம்". (இது நான் சொல்லயில்லை, எனக்கு ஸ்கூல்ல சொல்லித் தந்ததுதான்) "அந்த வம்சாவளி இப்பவும் இருக்கா?"*

*"இருக்கு, அதே 700 பேரின் ஜீன்ஸ்சோடயே இருக்கு, அதிலும் அரசியல்வாதியா நிறைய இருக்கு, அதை நான் உங்கிட்ட மட்டும் சொல்றேன்....." சொன்னேன்,*

***இப்ப சொல்லுங்க, எந்த பூர்வீகம் நீங்க?***

# ஒருநாள் வரும்

**ஒருநாள் வரும்...**
**உன்னிடமிருந்து வரும் SMS களை**
**நான் வாசிக்காத,**
**ஒருநாள் வரும்...**
**நீ எவ்வளதான் calls பண்ணினாலும்**
**நான் பதிலளித்து பேசாத,**

**ஒருநாள் வரும்...**
**நீ எவ்வளவுதான் பேசினாலும்**
**நான் பேசாத,**

**ஒருநாள் வரும்...**
**யார் எப்படி அன்பு காட்டினாலும்**
**அது எனக்கு விளங்காத,**

**ஒருநாள் வரும்....**
**நீ எவ்வளவுதான் அழுதாலும்**
**அது எனக்கு தென்படாத,**

**ஒருநாள் வரும்......**
**இப்போதா, இன்றா, நாளையா,**
**எப்போது.. என்று எவருமே அறியாத...**

**இறுதியில் நாம் எல்லோருமே**
**சென்றே ஆக வேண்டியதொரு**

**பயணம்....**
**'மரணம்'.....**
**சொல்லட்டா உனக்கு....**

**உயிர்வாழும்போதே நீ**
**அன்பை,**
**அரவணைப்பை பரிமாறிக் கொள்...**

**உயிர் வாழும்வரை அடுத்தவர்க்கு**
**நிம்மதியைக் கொடு...**
**வாழும்வரை முகத்தில் சிரிப்பையே**
**காட்டு....**

**உயிற்ற உடம்புக்கு**
**நீ காட்டும் அன்பை**
**உயிரோடு இருக்கையிலே நீ காட்டு...**
**உயிர்நீத்த பின்பு நீ**
**குழிதோண்டி தாட்டு...**

- ஹொரொவ்பொத்தான
**அகமட் இம்தியாஸ்**

# தந்தைக்கு ஒரு மடல்



**ஆஷிக் ஹூசைன்**
**ஹெம்மாதகம**

என்னுடைய பொறுப்பில் என் தந்தையை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட நான் அவருடைய பொறுப்புக்களை சுமந்தவனாக அவரின் நினைவுகளுடன் பயணித்துக்கொண்டு இருக்கின்றேன்.

ஆம் என் தந்தை என்னை விட்டுப் பிரிந்து பல வருடங்களாயினும் நினைவு களில் என்னுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஓர் தந்தையின் இழப்பென்பது யாராலும் ஈடு செய்யமுடியா வெற்றிடம் தான். உண்மையில் சொல்லப் போனால் ஒட்டி உறவாட, உயிராக நேசிக்க, உதவிகள் கொண்டு கவனித்திட ஆயிரம் பேர் பக்கத்திலிருந்தாலும் ஓர் தந்தையின் தயவிற்கு ஈடாகுவதில்லை...

அதிலும் குறிப்பாக என் தந்தை தன் பிள்ளை, குடும்பமென்றில்லாமல் சமூகத்திற்கும், இறைபணிக்கும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். ஒரு பெரும் நதி திடீரென அதன் ஓட்டத்தினை நிறுத்திக் கொள்வதனை மனதளவில் ஏற்றுக் கொள்வதென்பது அத்தனை எளிதல்ல. இருந்தும் தன் பொறுப்புக்களை கச்சிதமாக நிறைவேற்றி, தன் றப்பிற்காகவே வாழ்ந்து, அவன் புறம் தலை சாய்வது பெரும் பாக்கியம் தான் அல்ஹம்துலில்லாஹ்....

உண்மையில் ஒவ்வொரு இழப்புக்களும் பல பாடங்களை எமக்கு உணர்த்தி விட்டுத்தான் செல்கின்றது. என் தந்தையிடம் காணப்பட்ட அவரது பெருந்தன்மை போல் நான் எவரிடமும் கண்டதில்லை. அது சமூகத்திற்கே முன்மாதிரியாக இருக்குமென்பதும் அவரது மரணம் வரை நான் அறிந்திருக்கவுமில்லை.

அவர் வறுமை நிலையிலும், செல்வச் செழிப்போடு இருந்த நிலையிலும் அவரது நிலைப்பாடு ஒரேமாதிரித்தான் காணப்பட்டது. தனக்கென்று அவராக

விரும்பி எதனையும் வாங்கியது கிடையாது, அவர் பெரிதாக எதனையும் எதிர்பார்த்து ஆசைப்பட்டது கூடக் கிடையாது.

அதே போல் தன் பிள்ளைகளை விட அநாதைப் பிள்ளைகளைக் கவனிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். என்றும் எதிலும் எப்போதுமே எளிமை யுடனே வாழ்ந்தது நான் அவரிடம் கண்ட முன்மாதிரிகளில் ஒன்று. அவரின் வபாத்திற்குப் பிற்பாடு அவர் சம்பாதித்திருந்த மக்கள் கூட்டம், அவர் பற்றிய பிறரின் அபிப்பிராயம் உண்மையில் அவரது மகனாக பிறந்ததில் பாக்கியம் பெற்றதாக உணர்கிறேன் அல்ஹம்துலில்லாஹ்.

குறிப்பாக தன் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்த்தெடுப்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர். அதிலும் வீட்டில் கலகலப்பாக, எதாவது நகைச்சுவை களுடனே எம்மை அணுகுவார். எம்மைக் கண்டிப்புடன் வளர்த்ததே கிடையாது, அதுமட்டுமல்ல இன்னும் எத்தனையோ தனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக, இறைபணிக்காக கூடவிருந்தே ஒத்துழைத்த ஓர் உன்னத மனிதரின் இழப்பு என்றுமே நீங்கிடா ஒர் பெரும் துயர் தான்.

புன் சிரிப்பு, யார் மனதையும் புண்படுத்திடா நகைச்சுவைப் பேச்சு, பணிவு, அனைவரையும் மதித்திடும் குணம் அதற்கு அப்பால் யாருடைய குறைகளை யும் வீட்டில் வந்து அலசிடாப் பண்பு, யாருக்காகவும் எந்த நேரத்திலும் உதவிடும் குணம், பொறுப்புணர்வு இன்னும் எத்தனையோ அத்தனை அழகான பண்புகள் சுமந்த அந்த பூ உள்ளத்தின் இழப்பினை இன்று, இத் தருணம் நினைத்திடும் போதும் உயிர் உலுக்க, மனம் வலிக்கத்தான் செய்கின்றது...

இருந்தும் அவருக்கான பாதையை அழகாக, திறம்பட அமைத்துக் கொண்டு தன் ரப்பிற்காக வாழ்ந்து, அதன் வழியிலே ஓய்வெடுத்துக் கொண்டார். அல்லாஹ்வுடைய கிருபையால் தந்தை உடைய இறுதி நேரத்தில் அவர்களை பக்கத்தில் இருந்து கவனிக்கும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது அல்ஹம்துலில்லாஹ்.

தந்தையே!!! சந்தோசமான தருணங்கள் இன்று அரங்கேறிடும் போதெல்லாம், அதே போல் சில சந்தர்ப்பங்களில் இக்கட்டான சூழ்நிலைகளில் கூட ஈடு செய்ய முடியா உமது இழப்பு அவ்வப்போது பெரும் துயரளிக்கின்றது. எல்லாம் இறைவன் நாட்டம். அனைவரும் ஒரு நாள் சென்று தான் ஆக வேண்டும் என்ற விதியினை ஏற்றுக் கொண்டவனாக வல்ல நாயன் உங்களின் பாவங்களை மன்னித்து ஜன்னதுல் பிர்தௌஸினை அடைந்து கொள்ள அருள்புரிவானாக...

# மனதோடு ஓர் உரையாடல்...

மனமே....
உனக்கு எப்படி தெரிந்தது?
உன்னிடம் நிம்மதியென்றேன்....
மறையென்றாய்.!
சுகம் கேட்டேன்.... மனப்பாரமென்றேன்....
தஹஜ்ஜத்தில் என்னை வீழ்ந்திட கூறினாய்.!
ஆறுதல் தேடினேன்....
ஈமானிய உறவுகளென்றாய்.!
பொறுமையை கேட்டேன்....
தொழுகையில் நிதானமென்றாய்.!
பாசத்தை கேட்டேன்....
பண்பாடுகளின் பக்கங்களை
பட்டை தீட்டென்றாய்.!
தேவையைக்கூறினேன்....
படைத்தவனை மட்டும் தொடர்பு கொள்ளென்றாய்.!
மனத்திருப்தி என்றேன்....
இறைவனுக்காய் கொடு என்றாய்.!
சுவாசிக்க கேட்டேன்....
நபி வழியும் இறை மொழியுமென்றாய்.!
பெருந்தன்மை என்றேன்....
போதுமென்ற மனமென்றாய்.!
ஆரோக்கியம் என்றேன்....
உடற்பயிற்சியும் வாரமிரு நோன்புமென்றாய்.!
பெருமையில்லா அமல்களென்றாய்.!
என் இலட்சியம் என்றேன்....
இறை திருப்தியும் வெற்றியுமென்றாய்.! அத்தனையும்
உண்மை என்றேன்....
உண்மையானால் இயற்கை கூட இறையடிமை
எனக்கூறி மறைந்து விட்டாய்.........

அப்துல் கபூர் பாத்திமா நுஷ்லா
அக்கறைப்பற்று

# மற்றொன்று

'கவித்தோழி' -அதீனா அபூ உபைதா-
ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

'மற்றொன்று' என்ற வார்த்தைக்குள் கரைந்திட்ட
கண்ணீர் துளிகளின் உறுதியான நம்பிக்கை
ஒழிந்திருக்கின்றன.

நாட்காட்டியின் பக்கங்கள் புரட்டப்படும்
வேகத்திற்கேற்ப மனிதர்களின் நடத்தைகளும்
புரண்டோடுகின்றன.

உணர்வுடன் ஒன்றிப்போய் உடலில் ஊறித்
துளைத்திட்ட ஓர் அவா;
மற்றொன்று என்ற வார்த்தை மூலம் ஆத்மத்
திருப்தி பெற்றுவிடவா போகிறது...?

கிடைக்கவில்லை என்ற வெற்றிடத்தை
மற்றொன்று என்ற வார்த்தையை கொண்டு
நிவர்த்தி செய்வதென்பது,

முன்பு ஆசைப்பட்டிருந்தவற்றை அக்கினியில்
அங்கப்பிரதட்சனை செய்வது போலல்லவா?
ஐந்து எழுத்துக்களும் ஐம்புலன்களை அடக்கி
ஆளும் அளவிற்கு

என் ஆசைகள் ஒன்றும் அதிசயங்களல்ல,
அற்புதங்கள் என இதயம் பறையறைகின்றது.







முஷ்பிக முன்சிர்

## தேடலில் வந்த தோழன்

**நூலாசிரியர் - முஷ்பிக முன்சிர்**
**வெளியீடு - ஜே.எம்.ஐ வெளியீட்டகம்**
**வகை - கவிதைத் தொகுப்பு**
**பக்கங்கள் - 95**
**நூல் அறிமுகம் - பஹ்ரியா பாயிஸ் ஹெம்மாதகம**

# நூல் குறிப்பு...

*இலைமறை காயாக இருந்து சமூகத்தில் மெதுவாக நுழைந்து தனது திறமைகளை உலகிற்கு அறிமுகபடுத்திக் கொண்டு இருக்கும் இளம் எழுத்தாளரே* **முஷ்பிகா முன்சிர்.** *பத்திரிகைகள் சஞ்சிகைகள் என தனது எழுத்துத் திறமை மூலம் சமூகத்திற்கு சிறந்த செய்தியை வழங்கிக் கொண்டு வருகிறார். இவரின் கன்னி முயற்சியான முதல் புத்தகமே "***தேடலில் வந்த தோழன்***" என்ற தலைப்பிலான கவிதைத் தொகுப்பு நூல்.*

*இந்நூலானது 82 தலைப்புகளை சுமந்த சிந்தனை மிகுந்த ஆழமான தத்துவக் கருத்துக்களைக் கொண்ட சிறந்த நூலாகும். வாழ்வியல், சமூகம், இயற்கை, உணர்வுகள், என பல்வேறு தரப்பட்ட கருத்துக்களை கொண்ட கவிதைப் புத்தகமாகும்.*

*இந்த புத்தகத்தை வாசிக்கும் போது கவிதை இரசனை, சிந்தனையின் ஊடுருவல், போன்ற விடயங்களை விளங்கிக்கொள்ள முடியும். வாழ்க்கையே சவாலாக நினைப்பவர்களுக்குத் தோல்வியை பற்றி எழுதிய வரிகள் "தோல்வியை எதிரியாக்காதே"*

"தோளுடன் சேர் நண்பனாக்கு"
"தேடி வரும் இந்த நண்பன் துணை நிற்க வெற்றி என்று நினை"
ஆழமான வரிகள்.

அதேபோல சமூகத்தில் அங்கவீன மனிதர்களை மக்கள் பார்க்கும் விதம் வித்தியாசமானது. அவர்களுக்காக எழுதிய வரிகள் மெய்சிலிர்க்க சிந்திக்க வைத்தது.

"குறைகள் நிறைந்த அங்கவீனமோ..
சாதித்துக் கொண்டு இருக்கின்றது...
குறைகள் அற்ற நாமோ..
சந்துகளில் ஒங்கிக் கொண்டிக்கின்றோம்.." சீரிய கருத்துக்கள்.

இப்புத்தகத்தை வாசிக்கும் போது ஆழமான கருத்துக்களை அறிந்துகொள்ள முடியும். இப்புத்தகத்தில் சமூகத்திற்கு உந்து சக்தியான, தேவையான தலைப்புகளில் தத்துவக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அங்கவீனம், சிந்தனை, மனக்கவலை, பலம், சிந்திப்பீர், நேரத்தின் அரவணைப்பு, ஆளுமையின் அடையாளங்கள், இளைஞர்யுகம், புரிதல் இவ்வாறு பல்வேறு தரப்பட்ட தலைப்புகளில் சிந்தனை மேம்படுத்தும் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

அத்தோடு ஓர் முஹர்ரம், இறைக்கருணை, உன்நினைவில் யா அல்லாஹ், அன்னை பாத்திமாவின் வாரிசாய், இவ்வாறு மார்க்கம் சம்பந்தப்பட்ட கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

அதுமட்டுமல்லாது பொதுவான தலைப்புகளில், ஆலமரம், ஒப்பனை, பாதுகாப்பு, அறியாக்கைதேசம் என பல தலைப்புகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த கவிதைப் புத்தகத்தில் எல்லாவித இரசனைகளும் கலந்த , பல்வேறு தரப்பட்ட தலைப்புகளில் கவிதை இடம்பெற்றுள்ளன. ஒரே சிந்தனை கவிதைகள் அல்லாது பல்வேறு சிந்தனைகள் , பல்வேறு வகைகவிதைகள் இடம்பெற்றுள்ளன.

அனைவரும் வாசிக்கும் வகையிலான மொழிநடை, சொல் அமைப்பு, இலக்கணம் என அத்தனை விடயங்களையும் உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பு நூலாகும்.

# முகமூடி

சஜீலா ஆப்த்தீன்—குருநாகல்



வாழ்க்கை என்ற நாடகத்தில்
எத்தனை பாத்திரம் எனக்கு?
ஒவ்வொரு பாத்திரமாகும் போதும்
என்னை நானே மாற்றிக்
கொள்கிறேன் ...

மகளே! என அழைக்கிறாள் தாய்
நான் மகளாகிறேன்... அக்கா! என
அழைக்கிறாள் தங்கை நான்
அக்காவாகிறேன்... மனைவி! என
அழைக்கிறான் கணவன் நான்
மனைவி ஆகிறேன் ... தோழி! என
அழைக்கிறாள் நண்பி நான்
நண்பியாகிறேன் ....
ஒவ்வொருவரும் ஒவ்வொரு
பெயரால் என்னை
அழைக்கிறார்கள்! என்னை நான்
எப்படி அழைப்பது?

ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு
வேஷம் என் உண்மை வடிவம் எது?
புரியவில்லை எனக்கு...

வாழ்க்கை என்ற நாடகத்தில்
எத்தனை பாத்திரம் தான் எனக்கு?
தினம் ஒரு முகமூடியுடன் வலம்
வரும் மக்கள் முன் நானும்
எனக்கென தினம் தினம் புது
முகமூடி அணிந்து கொள்கிறேன்...
இங்கு நான் வாழ்வதற்கல்ல! எனக்கு
கடமையான- இந்த வாழ்க்கையைக்
கழிப்பதற்கு...



# இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதை விட இன்றைய இளைஞர்கள் இன்றே தலைவர்களாக பயிற்றுவிப்போம்

**றபீக் முஹம்மது ஹுஸைன்**
**இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்**



இளைஞர் என்பவர்களை ஒரு நாட்டினுடைய ஆணிவேராகவும் நாட்டின் முதுகெலும்பாகவும் கூற முடியும். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க ஒரு இளைஞன் நாட்டினுடைய அபிவிருத்திக்கும் எழுச்சிக்கும் எவ்விதம் பங்காற்றுவான் என்பது அவனது சிறுபராய செயற்பாடுகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய சமூகத்தில் காணப்படுகின்ற அதிகமான இளைஞர்கள் தற்போது உள்ள அறிவியல் வளர்ச்சியை வைத்து தன்னையும் தனது நாட்டையும் வளர்ச்சிப் பாதையிலும் அபிவிருத்திக்கும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொதுவாக நமது நாட்டுச் சட்டத்தைப் பொறுத்தவரை இளைஞர்கள் எனப்படுவோர், 15 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள் என ஐக்கிய நாடுகள் சபை வரை யறை செய்திருக்கின்றது.

பொதுவாக சதவீதப்படி உற்று நோக்கினால் இளைஞர் யுவதிகளே புதிய ஆக்கத்திறன்களையும், சுறுசுறுப்பான செயற்பாடுகளையும், தர்க்க ரீதியான நேர் மறை சிந்தனைகளையும் மற்றும் பல இன்னோரன்ன ஆளுமைகளையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

உலக சனத் தொகையில் ஆறில் ஒரு பங்கினர் இளைஞர்களாகக் காணப்படுகின்றனர். இளைஞர்களின் செயல்பாடுகளையும் அவர்களின் போக்குகளையும் ஒழுங்கு படுத்துவதன் மூலமாக மேம்பட்ட சமுதாயத்தை உலக தரத்தில் கொண்டு சேர்க்க முடியும். அதற்காக சான்றுகள் பல வரலாற்றில் இருந்து காணக் கூடியதாக உள்ளது.

தற்போதைய உலகில் காணப்படுகின்ற இளைஞர்கள் யாவரும் திறமையினாலும், அறிவினாலும் ஆற்றலினாலும் சிறப்பு வாய்ந்தவர்களாகவும் மற்றும் சமூக அக்கறை சமூக சிந்தனை நிறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தனது அன்றாட வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினையை தர்க்கரீதியாக ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு எடுப்பவர்களாகவும், வரையறைகள் இன்றி சிந்தனை ஆற்றல்களை விரிவுபடுத்தி பாரிய புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய புதிய ஆராய்ச்சிகள் என்பவற்றை மேற்கொண்டு உலகினை அடுத்த கட்டத்திற்கு இட்டு செல்பவர்கள் ஆகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க சிறப்புகளாக காணப்படுகின்றன.

தற்கால இளைஞர்கள் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பல வகையான சவால்களை தம்முடைய வாழ்க்கையில் அன்றாடம் எதிர்நோக்குப வர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் எதிர் நோக்குகின்ற இவ்வகையான சவால்கள் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி விடுகிறது.

அதாவது அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை. தவறான அரசியல் வாதிகளின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் வழிகாட்டல். சமூக ஏற்றத்தாழ்வுகள், ஜாதி, மத, இனம் சார் பாகுபாட்டுப் பிரச்சனைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், இவற்றில் சிலவாகும்...

கவலை என்னவென்றால் இளையோர்களுக்கான பல சவால்களும் சிக்கல்களும் நமது நாட்டின் முக்கிய தரப்பினர்களாலயே உருவாகிறது.

அதாவது, பல இடங்களில் பலரினால் இளையோர்கள் கறிக்கு கறிவேப்பிலை போலவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.. இளையோர்களின் தைரியத்தையும், சுறுசுறுப்பையும், உணர்ச்சிகளையும் பயன்படுத்தும் பலர் அவர்களின் ஆற்றல்களை ஆராய்ந்து அவர்களுக்கான வழிகாட்டல்களை செய்வதில் தவறுகின்றனர். பல இடங்களில் பல மேடைகளில் இளையோர்களின் ஆளுமைகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் பொறுமையாக பேசுபவர்கள் அவர்களுக்கான இடத்தைக் கொடுப்பதற்குத் தயாரில்லாமல் இருக்கின்றனர். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என கூப்பாடு போடும் பலர் இளையோர்களுக்கான அதிகாரத்தைக் கொடுப்பதற்கு மிகவும் யோசிப்பதே மிகவும் பயங்கரமான வழிப்படுத்தலாகும்.

மேலும் போதைப் பொருள் பாவனை இளையோர்களின் நடத்தையை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்லும் என அறிந்தும் நமது நாட்டின் முக்கிய தரப்புக்காளால் போதைப் பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என கோரிக்கைகளும் பிரேரணைகளும் வைக்கப்படுகிறது. இவை கவலைக்குரிய விடயங்கள் என்பதைத் தாண்டி பயங்கரமான செயல்களாகும்.

தற்போதைய இலங்கையின் நிலை காரணமாக, படித்த படிப்பிற்கு வேலை இல்லை, குடும்பச் சுமை, தனது எதிர்காலம், தனது கனவு என பலதரப்பட்ட யோசனைகளையும் கவலைகளையும் சுமந்து கொண்டு மன அழுத்தத்துடனே தற்போது ஒவ்வொரு இளைஞர்களுடைய இரவுகளும் நகர்கிறது.

இளைஞர்கள் எதிர் நோக்கும் இவ்வாறான சவால்களும் பிரச்சினைகளும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாகவே அமையும்.

ஒரு நாட்டின் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இன்றைய கால இளைஞர்களுக்கு எதையும் சாதிக்க முடியும் எதையும் செய்து கொள்ள முடியும் என்ற எண்ணமும், துணிவும், ஆர்வமும் அதிகமாகக் காணப்படுகிறது.

இவர்களை சரியான முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் ஒரு சமுதாயத்தை வளர்ச்சிப்பாதையை நோக்கி எடுத்துச்செல்ல முடிகின்றது. இத்தகைய இளைஞர்களை சரிவர ஒழுங்குபடுத்துவது ஒரு சமூகத்தின் கடமையாகும். தற்காலத்தில் காணப்படுகின்ற இளைஞர்கள் சமுதாய அக்கறை கொண்டவர் களாகவும், நாட்டுப் பற்று கொண்டவர்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

**ஒரு நாட்டினுடைய தூண்களாக காணப்படுகின்ற இளைஞர்களை அவர்களுக்கு எதிரான சவால்களில் இருந்து மீட்டு எடுத்து சரிவர வழி நடத்துவதன் ஊடாக ஒரு நாட்டில் சிறந்த தலைவர்கள் உருவாக்கப்பட்டு நாடு முன்னேற்ற நிலையை அடைய வைக்க முடியும். சமூக மாற்றம் என்பது இளையோர் வாழ்வியலிலேயே தங்கியுள்ளது என்பது எவரும் தவிர்க்க முடியாத ஒன்றாகிப்போய் உள்ளது.**

**வழிவிடுவோம் (இளையோர்களுக்கு) வென்றெடுப்போம் (நாட்டை)**



# சிக்கன் பேஸ்ட்ரி

**வஃபீரா வஃபி - கொழும்பு**

**தேவையானவை**

- கோதுமை மா - 500g
- Yeast - 1 மே.க
- சீனி- 1 மே.க
- உப்பு- 1 தே.க
- எண்ணெய் 2 மே.க

இவ்வளவையும் இளஞ்சூடான நீர் விட்டு சப்பாத்தி மாவு பதத்தில் பிசைந்து மூடி வைக்க வேண்டும். பிறகு 1/2 கப் எண்ணெயில் 3 மே.க கோதுமை மாவைக் கலந்து வைத்து விட்டு, பிசைந்த மாவை சப்பாத்திகளாக செய்து ஒவ்வொன்றிலும் எண்ணெய்–மாவு கலந்த பேஸ்ட்டை பூசி லேசாக மாவு தூவி, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி உருட்டி, மீண்டும் நான்காக மடித்து அரை அங்குல உயரத்துக்கு உருட்டி, சதுரங்களாகவோ, முக்கோணங்களாகவோ வெட்டி, சிக்கன் கலந்து செய்த உள்ளீட்டுக் கலவையை நடுவில் வைத்து மூடி, கலவையைச் சுற்றி வர அழுத்தி விட்டு (கலவை வைத்த பிறகு சுற்றிவர ஓரங்குல அளவு இருக்க வேண்டும்) பொரித்தெடுத்தால், சுவையான பேஸ்ட்ரி ரெடி! இது நோன்புக் காலத்தில் இப்தாருக்கு செய்ய பொருத்தமான சிற்றுண்டியாகும்.




# தேசாந்தரம்

## ஒரு வாசகப்பார்வை - முரளி

**ஊடகவியலாளர் திருமலை நவம் அவர்களின் தேசாந்தரம் என்னும் குறுநாவல் நம்மட முற்றம் வெளியீடாக மூதூர் ஜே.எம்.ஐ பிரசுரத்தினூடாக கடந்த 18.02.2024 அன்று வெளியீடு கண்டது.**

*தேசாந்தரம் என்கின்ற சொல்லானது அதிகளவில் பேச்சுவழக்கில் பயன் படுத்தப்படாத ஒரு சொல்லென்ற வகையில் அதன் கருத்தினை ஆராயப் புகுகையில் அவ்வாறான ஒரேமாதிரி ஒலிக்கும் இரண்டு சொற்கள் தமிழில் உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. அவை "தேசாந்தரம்", "தேசாந்திரம்" என்பனவாகும் அதில் தேசாந்திரம் என்பது நோக்கமின்றிப் பல இடங்களில் தன் விருப்பப்படிப் பயணம் செய்தல் என்று பொருள் கொள்ளப்படுகின்ற அதேவேளையில் தேசாந்தரம் என்பது தேசம், அந்தரம் என்கின்ற இரு சொற்களின் சேர்க்கையென குமரேச சதகம் என்கின்ற நூலிற்கான விளக்கவுரையில் திரு.புலவர் 'அரசு' அவர்கள் (புலவர். கா.திருநாவுக்கரசு) குறிப்பிடுகின்றார் அவ்வகையில் தேசம் என்பது நாடு, இடம் என்கின்ற கருத்துக்களையுடையதுடன் அந்தரம் என்கின்ற சொல்லானது வெளி, நடுவு நிலைமை என்கின்ற கருத்துக் களுடன் விபரீதம், தீமை (என்மனை வாழும் பெண்ணால் வந்ததந்தரம் - கம்பரா. கைகேசி.40) என்கின்ற கருத்துடையதாகவும் உள்ளது. அவ்வகையில் நூலின் பெயரிலிருந்தே நூலின் உள்ளடக்கத்தை தீமையும் விபரீதமும் நிறைந்த நாட்டைவிட்டு வேறுதேசம் செல்லல் என்கின்ற கருத்தினடிப்படையில் நோக்கமுடிகிறது.*

*பொதுவாக திருமலை மண்ணிலிருந்து கடந்த மூன்று வருடங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான நாவல்களே வெளிவந்தன அவற்றில் கதிர். திருச்செல்வத்தின் உயிரோடு நானாக, கே.எம்.எம்.இக்பால் அவர்களின் செரண்டிப், மற்றும் மாயனின் நூறுமின்னல்கள் என்பவை குறிப்பிடத்தக்கவை.*

எவ்வாறாயினும் குறுநாவல்கள் என்கின்ற வகையில் இக்காலப் பகுதியில் தேசாந்தரம் மட்டுமே வெளிவந்துள்ளது.

குறுநாவல் *(Novella)* எனப்படுவது ஒருவகை உரைநடை இலக்கிய மாகும். குறுநாவல், சிறுகதைக்கும் நாவலுக்கும் *(Novell)* இடைப்பட்ட ஒரு நெடுங்கதை வடிவம். அரபு மொழி இலக்கியப் படைப்பான ஆயிரத் தொரு இரவுகள் கதைகள் குறும் புதினத்தின் முன்னோடியென கருதப்படுகின்றன. *(Wikipedia - 06.03.2024)* உலக இலக்கியப்பரப்பில் குறுநாவல்களும் மிக முக்கிய பங்கினை வகிப்பதுடன் எர்னஸ்ட் ஹெமிங்வே எழுதிய கடலும் கிழவனும் என்கின்ற குறுநாவல் அவருக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசிற்கான காரணமாயும் அமைந்தமை குறிப்பிடக்கூடியதாகும்.

பொதுவாக நவீன தொழிநுட்ப சாதனங்களின் பாவனைக் காலத்தில் மாணவரும் மற்றவரும் நூல்களைக் கையிலெடுத்து படிப்பது குறைவடைந்து வருகின்ற அதே வேளை மிகக்குறுகிய வடிவங்களில் உருவாக்கப்படுகின்ற அசையும் படங்களின் *(Tiktok, YouTube Shorts)* அதிக வரவேற்பும் அதனூடாக மிகக்குறுகிய காலத்தில் மிக்க செயற்திறனுடன் பரிமாறப்படும் மிகப்பெரிய தகவல்களும் மலிந்துபோயிருக்கின்ற இக்காலகட்டங்களில் அதிக எண்ணிக்கயான பக்கங்களை யுடைய நாவல்களை விடவும் மிகக் குறுகிய நேரத்தில் படித்து முடித்துவிடக்கூடிய குறுநாவல் களின் வரவானது புதிய தலைமுறையின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க பொருத்தமான ஒரு இலக்கிய வடிவமாகக் கருதப்படலாம்.

இந்நூலைப்பற்றி பேசுகின்றபோது இந்நூலானது திருகோணமலையில் கடந்த காலங்களில் நடந்த முக்கியமான சம்பவங்களைப் பேசுவதால் இது ஒரு வரலாற்று நாவல் எனப்பேசப்படுவதும் மற்றொரு புறத்தில் இதுவொரு வரலாற்று நாவலல்ல அதற்கான பண்புகள் இந்நாவலில் இல்லை என்பதுடன் இதுவொரு வட்டார நாவலே என இருவேறு கருத்துக்கள் பேசப்படுவதை அவதானிக் கக்கூடியதாகவுள்ளது.

முதலில் வட்டார நாவலுக்கான பண்புகள் எவையென்று நாம் நோக்குகின்றபோது *Tamil Virtual Academy* இன் நாவலின் தோற்றமும் வகைகளும் என்கின்ற கட்டுரை “ஒரு குறிப்பிட்ட வட்டாரத்துக்குள் வாழும் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் நாவல் **வட்டார நாவல்** எனப்படும். அம்மக்களின் உரையாடல் நடை யிலேயே அந்நாவல் எழுதப்பட்டிருக்கும்.” எனக்குறிப்பிடுகிறது.

தொடர்ந்து வரலாற்று நாவல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் "வரலாற்று நாவல்களில் வரலாற்று உண்மை களைப் புள்ளிகளாக ஆங்காங்கே அமைத்து அவற்றைச் சுற்றித் தம் புனைவுகளை இழைகளாக இணைத்து நாவலாக்குகின்றனர். வரலாற்றுச் சூழல்கள் இந்நாவல்களில் மையமாக இருக்கும். நிகழ்வுகளும், பாத்திரங்களும் நாவல்களை நடத்திச் செல்வனவாக இருக்கும்." என வரலாற்று நாவல் என்பதை விளக்க முற்படுகிறது.

அவ்வகையில் பார்க்கும் பொழுது தேசாந்தரமும் வரலாற்று உண்மைகளைப் புள்ளிகளாகக் கொண்டே அவற்றைச்சுற்றி ஆசிரியர் தமது புனைவுகளை கிளைகளாக அமைத்தே இந்நாவலை உருவாக்கியிருப்பதைப் பார்க்கின்றோம். ஆனால் சமகால வரலாற்று நிகழ்வுகளை நாவலாக்கினால் நிகழ்ச்சிகள் அனைத்தும் உண்மைகளாக இருக்க வேண்டும். கற்பனைப் பாத்திரங்களைப் பயன்படுத்த முடியாது (*Tamil Virtual Academy* இன் நாவலின் தோற்றமும் வகைகளும்) என்கின்ற கருத்தை ஊன்றி நோக்குகையில் தேசாந்தரமும் அச்சவால்களுக்கு விதிவிலக்கானதல்ல என்றே எண்ணத்தோன்றுகின்றது. இதுவொரு வட்டார நாவல்தான் என்பதற்கு சாதகமான மற்றொரு வாதமான இந்நாவல் மிகச்சிறிய நிலப்பரப்பில் நடந்ததொரு நிகழ்வை மட்டுமே இது பேசுகிறது என்கின்ற கருத்தை சீர்தூக்கி நோக்குகையில்

*Encyclopedia Britannica* வரலாற்று நாவல் என்பதை இவ்வாறு விளக்குகிறது .

*"a novel that has as its setting a period of history and that attempts to convey the spirit, manners, and social conditions of a past age with realistic detail and fidelity to historical fact. The work may deal with actual historical personages, as does Robert Graves's I, Claudius (1934), or it may contain a mixture of fictional and historical characters. It may focus on a single historic event, as does Franz Werfel's Forty Days of Musa Dagh (1934)"*

அதாவது நாவலானது தனியான ஒரு வரலாற்று நிகழ்வை மட்டுமேகூட மையமாகக் கொண்டு எழுதப்பட லாம் என்கிறது. நிகழ்களம் சார்ந்து தமிழின் பிரபல்லியமான வரலாற்று நாவல்கள் (பொன்னியின் செல்வன்..) பேசுகின்றது போன்று பெரியதொரு நிலப்பிரதேசத்தைப்பற்றி பேசவில்லை என்கின்ற விடயத்திலும் உரையாடல் களில் வட்டார மொழிவழக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதிலும் தேசாந்தரம் சற்றுப் பலங்குன்றி விடுவதை நோக்குகின்ற அதேவேளை வரலாற்று நாவல்கள் கட்டாயமாக ஒரு பெரியதொரு நிலப்பரப்பை கதை நிகழ்களமாகக் கொண்டிருக்க வேண்டுமென்கின்ற கட்டாய வரையறைகள் எதுவுமில்லையென் பதையும் கருத்திலெடுக்கவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம்.
எது எவ்வாறாயினும் நூலாசிரியரின் கூற்றுப்படி தேசாந்தரம் திருகோணமலையின் வரலாற்றில் சோகக்கறைபடிந்தவொரு நிகழ்வை

பதிவுசெய்திருப்பதுவும் அது சம்பந்தமான தகவல்களை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு கடத்துகின்ற மிகமுக்கியமான, மிகச்சிறந்த ஆவணமாகத் திகழும் என்பதுவும் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி ஏற்றுக்கொண்டேயாக வேண்டிய விடயமாகும்.

நாவலின் கட்டமைப்பை நோக்குகின்ற போது 76 பக்கங்களில் 10 அத்தியாயங்களை கொண்டதொரு குறுநாவலாக வடிவமைக்கப் பட்டிருக்கின்ற நாவல் முதல் 40 பக்கங்கள் நீலா எனப்படுகின்ற கதாபாத்திரத்தை மையமாகக் கொண்ட கதையையும் அடுத்த 36 பாத்திரங்கள் வித்யா எனும் பாத்திரத்தின் காதலை மையமாகக் கொண்ட கதையுடன் இரு கதைகளை ஒரே நேர்கோட்டில் சொல்லிச் செல்கிறது. கதை சொல்லப்பட்டுள்ள விதம் மற்றும் கதையின் கட்டமைப்பு தர்க்கரீதியானதாகவும் சாதாரண வாசகர்களாலும் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எளிமையானதாகவும் சுவாரசியம் மிக்கதாகவும் அமையப் பெற்றுள்ளது. ஆயினும் அட்டைப் படம் வடிவமைப்பில் பொருத்த மானதாக இருந்த போதிலும் அதில் அச்சிடப்பட்டிருக்கின்ற சில கண்ணீர் சிந்தும் முகஅமைப்புக் கள் அட்டைப்படத்தின் தாற்பரியத்தில் தாக்கம் விளைவிக்க கூடிய தாய் அமைந்திருப்பது சற்று கவனத்திற் கொள்ளப்பட வேண்டி யதாக அமைகிறது.

நாவலில் கதை நிகழும் காலம் கதைக்குள்ளே குறிப்பாக பேசப்படா விட்டாலும் திருமலையின் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட காலத்தில் மூதூரில் தொண்டுப்பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்பே என்பதை வாசகன் புரிந்துகொள்கின்ற அதேவேளையில் நூலாசிரியர் தனதுரையில் இக்கொடூர சம்பவங்கள் நடைபெற்றது 2006ம் ஆண்டில் என்பதையும் அவ்வாண்டில் நடைபெற்ற கொடூர சம்பவங்களை எவ்வாறாயினும் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற உந்துதலிலேயே இந்நாவல் எழுதப்பட்டது என்பதிலிருந்தும் கதை நிகழும் காலம் எதுவென்பது பட்டவர்த்தனமாகிறது.

நாவலின் கதைக்களம் திருகோணமலை நகரத்தையும் நகரத்திலமைந்துள்ள வீதிகள், இடங்கள், ஆலயம், வைத்தியசாலை, கடற்கரை, முற்றவெளி போன்ற இடங்களிலேயே நாவலின் பெரும்பகுதி நிகழ்கிறது. மூதூாில் நடந்த தொண்டுப் பணியாளர்களின் படுகொலை பற்றி பேசப்பட்டாலும் கதை அதை நோக்கி நகராதது மட்டுமன்றி மூதூரில் நடந்தேறிய படுகொலைகள், இடப்பெயர்வு மற்றும் அங்கு நடந்தேறிய போர் மற்றும் அதன் பாதிப்புக்களை விபரமாக பேசத்தக்க

இலக்கியமொன்றிற்கான இடைவெளியை சுட்டிநிற்பதுடன் அதற்கான கதவுகளையும் தேசாந்தரம் திறந்துவிடுகிறது.

நாவலின் மொழிநடையை உற்று நோக்குகின்ற பொழுது மிகவும் எளிமையான மொழி நடையில் யாழ்ப்பாண மொழி வழக்கை ஆங்காங்கே உரையாடல்களில் சிறப்பாக பயன்படுத்தி இருக்கின்ற அதே வேளையில் தமிழில் பாவிக்கப்படாத நாளாந்தம் எமது பேச்சு வழக்கில் சேர்த்துக் கொள்ளாத அரிதான சொற்களையும் அத்துடன் சாதாரண பேச்சுவழக்கில் பயன்படுத்துவதற்கு தயக்கம் காட்டுகின்ற நல்ல தமிழ்சொற்கள் சிலவற்றை இங்கு பயன்படுத்தப்பட்டிருப்பது மிகச் சிறப்பாக இருக்கின்றது. அதே வேளையில் இங்கே பேசப்படுகின்ற விடயம் மிகவும் கூருணர்வு மிக்க விடயம் என்பதை கவனத்தில் எடுத்து மிகச் சிறப்பான மிக கவனமான சொற்தேர்வு ஆசிரியரால் கையாளப்பட்டிருப்பதையும் பயன்படுத்தப்பட்டி ருக்கின்ற சொற்களின் ஊடாக தேவையற்ற விமர்சனத்தை அல்லது பின் விளைவுகளை தவிர்க்கு முகமாகவும் சொற்கள் மிக கவனமாக கையாள பட்டிருப்பதை நாவல் முழுவதும் காணக்கூடியதாக இருக்கிறது.

கதை மாந்தர்களை நோக்கும் போது மிக முக்கியமாக நான்கு பாத்திரங் களை இங்கு குறிப்பிட வேண்டி இருக்கிறது நீலா, நயந்தன், வித்தியா மற்றும் அருண் ஆகிய நான்கு பாத்திரங்கள் கதையின் முக்கியமான பாத்திரங்களாக வடிவமைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் நீலா என்னும் பாத்திரம் கதை முழுவதும் ஊடாடுகின்ற ஒரு பாத்திரமாக காணப்படுகின்றது. கதையில் இன்னும் சில பாத்திரங்கள் ஊடாடுகின்ற போதிலும் இந்த நான்கு பாத்திரங்களுக்கு ஊடாகவே மையக்கதை நகர்த்தப்பட்டு இருக்கின்ற விதம் சிறப்பானதாகவும் வாசகனை ஈர்க்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக தொல் தமிழ் இலக்கிய காலங்களில் இருந்து தமிழர் தம் வீரத்தை போரை, போர் விளைவித்த அவலங்களையும் காதலுடன் அழகிய லைக் குழைத்து சுவைபடப் பேசுவதே தழிழர்தம் இலக்கிய மரபாகும் அவ்வகையில் மரபு எவ்வகையிலும் மீறாதவகையில் இந்த மண்ணில் நடந்த சோகம் கலந்த இரண்டு கொடூர நிகழ்வுகளை காதலெனும் கற்கண் டைக் கலந்து கசப்பு மருந்தை வாசகனுக்கு புகட்டுகிற கலையில் தேசாந்தரம் தன்னை மீண்டுமொருமுறை நிரூபித்து நிற்கிறது.

நீலா-நயந்தனின் காதல் 2000 களுக்குப்பின்னான காதலை இலத்திரனியல் சாதனங்களின் முக்கியமாக கைப்பேசிகளின் வருகைக்குப்பின்னான காதலின் பரிணாம வளர்ச்சியை உள்வாங்கிக்கொண்டு தமிழ் மரபு மாறாத காதலை

இங்கு வடிவமைத்து தந்திருப்பது சிறப்பு. அவ்வாறே அருண்-வித்யாவின் காதலும் தமிழர் பண்பாட்டு பின்னணியில் எழுகின்ற ஒரு காதலாக குடும்பக் கட்டுமானங்களிலும் உறவுகளின் பிணைப்பின்மீதும் ஊறுவிளை விக்காத ஆரோக்கியமான காதலாய் இங்கே காட்டப்பட்டு இருப்பது அழகு.

நாவலின் பலவீனங்களாக எழுத்தாளர் எடுத்தாண்டிருக்கும் கதைக் கருவானது 2006ம் ஆண்டில் திருமலை கடற்கரையில் நடைபெற்ற ஐந்து மாணவர் படுகொலை தொடர்பாக பேசுகின்ற வேளையில் சம்பவம் பற்றிய ஒரு பக்க பார்வை மட்டுமே பதிவு செய்யப்பட்டு இருப்பதை அறியக் கூடியதாக இருக்கிறது. இது திருமலையில் நடந்த மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்கின்ற வகையில் இது சம்பந்தமான ஒரு பன்முகப் பார்வையை இந்த கதையின் ஊடாக பதிவு செய்திருப்பதன்மூலம் அச்சம்பவம் சம்பந்தமான சாியான நுணுக்கமான தகவல்களை சமகாலத்தவர்கள் மட்டுமன்றி அடுத்த சந்ததியினரும் பெறுவதற்கான வாய்ப்புகளை இந்த நாவல் தவற விட்டு விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

ஆங்காங்கே கதையின் போக்கில் சில தெருக்களையும் அத்தெருக்கள் சென்றடையும் இடங்களையும் பற்றி விபாிக்கின்றபோது அதை சாியாக புரிந்துகொள்வதில் சிறிய குழப்பம் வாசகனுக்கு ஏற்படத்தக்க வகையில் அவற்றை விபரித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது அவற்றை தவிர்ப்பதன் மூலம் வாசகனுக்கு நிகழ்களம் பற்றி ஒரு தெளிவான விம்பத்தை அவனின் மனத்திரையில் தீற்றுவதற்கான வாய்ப்புகள் திறக்கப்படும்.

எல்லா நூல்களிலும் ஆங்காங்கே நுண்ணிய எழுத்துப்பிழைகள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது போலவே தேசாந்தரத்திலும் எழுத்துப்பிழைகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவற்றை அடுத்த பதிப்பில் திருத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பதிப்பாளர்கள் மேற்கொள்வார்கள் என்று நாம் நம்பலாம்.

மொத்தத்தில் விபரீதங்களும் தீமைகளும் நிறைந்த ஒரு தேசத்திலிருந்து தேசாந்தரம் போகும் மாந்தர்களின் இக்கதை திருமலை மண்ணில் நடந்த மிக முக்கியமான கொடூரமான நிகழ்வுகளை பதிவு செய்கின்ற ஒரு ஆவணமாக கருதப்படுவது மட்டுமல்லாமல் அடுத்தடுத்த சந்ததிகளைச் சென்றடைவதற்கான சாத்தியப்பாடுகளையும் உருவாக்கவேண்டியது திருமலை மண்ணின் மைந்தர்கள் ஒவ்வொருவரதும் கடைமை என்பதுடன் அனைவரும் இந்த நாவலை வாசிப்பதுடன் அது சம்பந்தமான உரையாடல்களை நிகழ்த்த வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.


PEARL GRAND
Pearl Grand
RECEPTION HALL
WEDDING | WALEEMA | BIRTHDAY PARTIES | SPECIAL EVENTS | FAMILY FUNCTIONS
• CAN ACCOMMODATE MORE THAN 1000 PERSONS
• CAN SEPARATE GENTS AND LADIES
• SEPARATE WASHROOMS FOR GENTS AND LADIES
• BUDGET FRIENDLY
• TWO FLOORS & EASY PARKING AREA
• LIVE VIDEO SHOOTING & PHOTOGRAPHY
• ARRANGEMENTS WITH REFRESHMENT & FOOD PACKS
• ARRANGEMENTS DJ SETUP
• DTS SOUND & ANNOUNCEMENT SYSTEM PROJECTOR
• FULL COMFORTABLE PLACE
CONTACT
0771544488 / 0756026304
PEARL GRAND
KNOX ROAD MUTUR


SAJEEM
Service Center
We Provide Professional
Motor Bike service
Water and Oil Washing
Bike engine Repair
Bike Full Service
Spare Parts and bike Sales
CONTACT NOW
075 764 9200 | 076 440 9200
Batticaloa Road 3CD Junction Mutur

# MUTUR JMI PUBLICATION

MUTUR JMI PVT LTD
jmi MUTUR
SINCE 2016

CUSTOMER SATISFACTION 100 GUARANTEE

## Offset Printing & Photocopy , Print Services


MINIMUM QUANTITY 100

40% OFF

***Island Wide Free Delivery Available***

Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |

FREE DELIVERY










### Offset Printing

- Four Color to One Color
- 70 ~ 250 GSM Papers
- A5, A4, A3, Offset Printing
- Photocopy & Duplo
- Typing & Layouts
- Cover Design
- Visiting Card

### Book Binding

- Perfect & Hard Binding
- Book Publication
- Glossy & Mett Lamination
- 50 ~ 120 Gsm Papers
- Magazine, Book, Project
- Publications Sponsorship
- Instalment Payment Available

### Color Printing

- Four Color (Inject & Laser)
- 70 ~ 300 GSM Board & Papers
- A5, A4, A3, B5, Color Printing
- Certificate & Photos
- Layouts & Designing
- Visiting Cards, Invitation and All Types of Wedding Cards
- Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc

**Our Office**

Bazar Mosque Road
Mutur - 04, 31200
Trincomalee, Sri Lanka

***Mutur JMI***
Contact Now
**077 1020030**
**0262238593**

**More Information**

www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob